**க.து.ந.க.எண்.பி1/3161/2007**

**ஆணையர் அவர்களின் 06.03.2008 நாளிட்ட குறிப்பு**

## 19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :207/2008 பொருள் எண் :1

**பழைய கட்டடத்தை இடிப்பதற்கு மற்றும் மதிப்பீடு**

வார்டு எண் : 1 மண்டலம் : 1

| | |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் விவரம் | கட்டடத்துறை – சின்ன கொடுங்கையூரில் உள்ள சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளியில் ஏற்கனவே பழுதடைந்த நிலையில் உள்ள கட்டடத்தை இடித்துவிட்டு அவ்விடத்தில் புதியதாக மாடிப்படி அறையுடன் தரைதளத்தில் 2 வகுப்பறைகள், சமையலறை மற்றும் கழிவறை, முதல்தளத்தில் 2 வகுப்பறைகள், ஆசிரியர் அறை மற்றும் கழிவறை கொண்ட கட்டடம் கட்டும் பணி. |
| இடிக்கப்படவேண்டிய கட்டடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | 1972 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். |
| இடிக்கப்படவேண்டிய கட்டடத்தின் பரப்பளவு | 2040 சதுர அடி |
| இடிக்கப்படவேண்டிய கட்டடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.41,015/– |
| கட்டடம் இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்த நிலையில் உள்ளது |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை..../ மண்டலம் | கட்டடத்துறை |
| மதிப்பீட்டுத்தொகை ரூபாய் (இலட்சங்களில்) | ரூ.32.12 இலட்சம் |
| விலைப்பட்டி ஆண்டு | 2007–2008 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி. |
| நிதியின் மூலதன்மை | மூலதனநிதி – கட்டடத்துறை 2007–2008 |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | 1வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.314/2008 நாள்:20.02.2008. |

எனவே, மேற்கண்ட பணியிடத்தில் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டடத்தை இடிப்பதற்கும் மற்றும் அவ்விடத்தில் புதியதாக இடிமானப்பணியுடன் மாடிப்படி அறையுடன் தரைதளத்தில் 2 வகுப்பறைகள், சமையலறை மற்றும் கழிவறை, முதல்தளத்தில் 2 வகுப்பறைகள், ஆசிரியர் அறை மற்றும் கழிவறை கொண்ட கட்டடம் கட்டும் பணிக்கான திட்ட மதிப்பீடு ரூ.32,12,000/–க்கும் நிலைக்குழுக்கள் (கல்வி) மற்றும் (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“07.05.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.43, நாள்:07.05.2008 ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“19.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.106/2008 , நாள்: 19.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.4.ந.க.எண்.இ1/2916/2008**
**ஆணையர் அவர்களின் 28.04.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :208/2008 பொருள் எண் : 2

**கட்டடம் இடிக்க அனுமதி**

| வார்டு எண்.60 | மண்டலம்–4 |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–4, வார்டு–60 சிவசண்முகபுரம் A பிளாக் 2வது தெருவில் உள்ள பழுதடைந்த சென்னை மாநகராட்சி பால்வாடி கட்டிடம் |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | 40 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது |
| கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு மற்றும் கட்டிடத்தின் பரப்பளவு | 2007–08 ஆண்டின் தற்போதைய புத்தக மதிப்பு ரூ.650/–<br>கட்டிடத்தின் பரப்பளவு : 1814 சதுர அடி |
| கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இவ்வலுவலகத்தை இடித்து விட்டு நவின வசதிகளுடன் கூடிய சத்துணவு கூடம் உடற்பயிற்சி கூடம் மற்றும் துவக்கப்பள்ளிக்கு சமையல் கூடம் ஆகியவை கட்டுவதற்கு |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | 4–வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.139, நாள் : 26.03.2008 |

எனவே, மேற்கண்ட கட்டடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.104/2008, நாள்: 19.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.4.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.4.ந.க.எண்.இ1/2917/2008**
**ஆணையர் அவர்களின் 28.04.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :209/2008 பொருள் எண் :3

**கட்டடம் இடிக்க அனுமதி**

| வார்டு எண்.61 | மண்டலம்–4 |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–4, வார்டு–61 சுந்தரம் லேனில் உள்ள மிகவும் பழுதடைந்த சென்னை மாநகராட்சி துப்புரவு ஆய்வாளர் அலுவலக கட்டிடம் |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | 40 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது |
| கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு மற்றும் கட்டிடத்தின் பரப்பளவு | 2007–08 ஆண்டின் தற்போதைய புத்தக மதிப்பு ரூ.17,231/–<br>கட்டிடத்தின் பரப்பளவு<br>தரைதளம் 600 சதுர அடி<br>முதல் தளம் 128 சதுர அடி |
| கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இவ்வலுவலகத்தை இடித்து விட்டு அனைத்து வசதிகளுடன் கூடிய துப்புரவு ஆய்வாளர் அலுவலகம் மற்றும் உடற்பயிற்சி கூடம் ஆகியவை கட்டுவதற்கு |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | 4–வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.138, நாள் 26.03.2008 |

எனவே, மேற்கண்ட கட்டடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.103/2008 , நாள்: 19.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.4.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.6.ந.க.எண்.இ1/2264/2008**
**ஆணையர் அவர்களின் 16.05.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :210/2008 பொருள் எண் : 4

**கட்டடம் இடிக்க அனுமதி**

| வார்டு எண்.94 | மண்டலம்–6 |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–6, வார்டு–94, அவ்வை சண்முகம் சாலையில் உள்ள மிகவும் பழுதடைந்த 94வது வார்டு அலுவலக கட்டிடம் |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | 41 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது |
| கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு மற்றும் கட்டிடத்தின் பரப்பளவு | 2007–08 ஆண்டின் தற்போதைய புத்தக மதிப்பு ரூ.4,969.46<br>கட்டிடத்தின் பரப்பளவு : தரைதளம் 550 சதுர அடி |
| கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | பழமை காரணமாக சிதிலமடைந்து விட்டதாலும், பக்கச் சுவர் மற்றும் ஆர்.சி.சி. தள மேற்கூரை ஆகியவற்றில் விரிசல்கள் ஏற்பட்டும், காரைகள் பெயர்ந்தும் பழுதுபார்க்க இயலாத நிலையில் உள்ளதாலும் இடிக்கப்பட வேண்டியுள்ளது. |
| திட்ட முன்மொழிதல் | பழமையான சிதிலமடைந்த கட்டிடத்தை இடித்து அகற்றி விட்டு, அவ்விடத்தில் கட்டிடத்துறை மூலம் கோட்ட இளநிலை பொறியாளர் அலுவலகம், சுகாதார ஆய்வாளர், துப்புரவு ஆய்வாளர் மற்றும் மன்ற உறுப்பினர் ஆகியோருக்கு அலுவலக அறைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | 6–வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.07, நாள் : 30.01.2008 |

எனவே, மேற்கண்ட கட்டடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.117/2008 , நாள்: 19.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.6.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.7.ந.க.எண்.இ1/3227/2008**
**ஆணையர் அவர்களின் 06.05.2008 நாளிட்ட குறிப்பு**

## 19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :211/2008 பொருள் எண்: 5

### பள்ளி கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி

வார்டு எண்.112 மண்டலம்–7

| | |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–7, பகுதி–21, வார்டு–112, அம்மையப்பன் சந்தில் உள்ள பழுதடைந்த சென்னை மாநகராட்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளி கட்டிடம். |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | சென்னை மாநகராட்சி 1937 |
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | 795.16 சதுர மீட்டர் (8556 ச.அடி.) |
| கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.49,250/– |
| கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்த நிலையில் உள்ளதால் இடிக்கப்பட வேண்டியுள்ளது. |
| திட்ட முன் மொழிதல் | பழுதடைந்த நிலையில் உள்ள சென்னை மாநகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளி கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக மருந்தகம் கட்டும் பணி. |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | 7வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.1030 நாள்: 16.04.2008 |

எனவே, மேற்கண்ட பழுதடைந்த சென்னை மாநகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளி கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (கல்வி), மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“07.05.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.48, நாள்:07.05.2008 ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“19.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.109/2008 , நாள்: 19.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.7.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.10.ந.க.எண்.சி3/2361/2008**
**ஆணையர் அவர்களின் 04.04.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :212/2008 பொருள் எண் :6

**பழுதடைந்த சத்துணவு மையக் கட்டிடங்கள் இடிக்க அனுமதி**

| வ.எண். | வார்டு எண்.144 | மண்டலம்–10 |
|---|---|---|
| 01. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | முண்டக கண்ணியம்மன் தெருவில் உள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் அமைந்துள்ள முலாம் பூசிய தகடு வேயப்பட்ட சத்துணவுக் கூடம் எண்.1052 மற்றும் 1070 |
| 02. | கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | மண்டலம்–9<br>தற்போது மண்டலம்–10 வருடம்–1982 |
| 03. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | 800 ச.அடி |
| 04. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.71,612/– |
| 05. | கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | கட்டிடம் சிதிலமடைந்து பயன்பாட்டுக்கு ஏற்றதாக இல்லை |
| 06 | திட்ட முன் மொழிதல் | கழிவறையுடன் கூடிய R.C.C. தளம் அமைத்து புதிய சத்துணவு கூடம் கட்டும் பணி |
| 07. | வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | 10வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.901 நாள் 17.10.2007 |

எனவே, மேற்கண்ட சத்துணவு கூட கட்டிடங்கள் இடிப்பதற்கு நிலைக்குழு (கல்வி), மற்றும் நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“07.05.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.46, நாள்:07.05.2008 ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு ( பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“19.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.107/2008 , நாள்: 19.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.10.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>ம.அ.10.ந.க.எண்.சி3/2362/2008</u>
<u>ஆணையர் அவர்களின் 04.04.2008 நாளிட்ட குறிப்பு</u>

<u>19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :213/2008 பொருள் எண் : 7

<u>பழுதடைந்த சத்துணவு மையக் கட்டிடம் இடிக்க அனுமதி</u>

| வ.எண். | வார்டு எண்.144 | மண்டலம்–10 |
|---|---|---|
| 01. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | முண்டக கண்ணியம்மன் தெருவில் உள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் அமைந்துள்ள முலாம் பூசிய தகடு வேயப்பட்ட சத்துணவுக் கூடம் எண்.1053 |
| 02. | கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | மண்டலம்–9<br>தற்போது மண்டலம்–10 வருடம்–1982 |
| 03. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | 800 ச.அடி |
| 04. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.70,300/– |
| 05. | கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | கட்டிடம் சிதிலமடைந்து பயன்பாட்டுக்கு ஏற்றதாக இல்லை |
| 06 | திட்ட முன் மொழிதல் | கழிவறையுடன் கூடிய R.C.C. தளம் அமைத்து புதிய சத்துணவு கூடம் கட்டும் பணி |
| 07. | வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | 10வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.902 நாள் 17.10.2007 |

எனவே, மேற்கண்ட சத்துணவு கூட கட்டிடம் இடிப்பதற்கு நிலைக்குழு (கல்வி), மற்றும் நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"07.05.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.47, நாள்:07.05.2008 ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"19.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.108/2008 , நாள்: 19.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.10.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

க.து.ந.க.எண்.பி9/3199/2005
ஆணையர் அவர்களின் 31.03.2008 நாளிட்ட குறிப்பு.

## 19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :214/2008 பொருள் எண்: 8

மதிப்பீடு

வார்டு எண் : 136 மண்டலம் : 9

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | கட்டடத்துறை – சுப்பு பிள்ளைத் தோட்டத்தில் மருந்தகக் கட்டடம் (தரைத்தளம்) கட்டும் பணி. |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை ...../ மண்டலம் | கட்டடத்துறை |
| மதிப்பீட்டுத்தொகை ரூபாய் (இலட்சங்களில்) | ரூ.49.80 இலட்சம் |
| விலைப்பட்டி ஆண்டு | 2007–2008 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி |
| நிதியின் மூலத்தன்மை | மூலதனநிதி – கட்டடத்துறை 2007–2008 |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | தீர்மான எண்.82, நாள்:26.03.2008 |

எனவே, மேற்கண்ட பணிக்கான திட்ட மதிப்பீடு ரூ.49,80,000/–க்கு நிலைக்குழுக்கள் (பொது சுகாதாரம்), (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘05.05.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண். 30 / 2008 நாள் 05. 05. 2008– ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம் ) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மற்றும் (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’

‘‘19.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.105/2008, நாள்: 19.5.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“23.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.71/2008 நாள்: 23.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. “

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## 19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :215/2008 பொருள் எண்.9

**சென்னை மாநகராட்சி, உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு இரவு காவலர் பணிக்கு இராஜ் செக்யூரிட்டி போர்ஸ் நிறுவனத்திற்கு 1.11.07 முதல் 31.10.08 வரை ஒரு வருடத்திற்கு பணி வழங்க ஒப்புதல் வேண்டி.**

சென்னை மாநகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு பாதுகாப்பு நலன் கருதி இரவு காவலர் பணிக்கு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

அதன்படி 21.09.2007 அன்று மாலை 3.00 மணியளவில் கூர்ந்தாய்வு குழு தலைமையில் கல்வி அலுவலர், கணக்கு அலுவலர் (கல்வி) மற்றும் செயற்பொறியாளர்–2 (இயந்திரப் பொறியியல் துறை) ஒப்பந்ததாரர் முன்னிலையில் மூடிய அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் பெட்டி திறக்கப்பட்டு, மூன்று ஒப்பந்தங்கள் பெறப்பட்டன.

1. விஜய் செக்யூரிட்டி சர்விஸ்.
2. ராஜ் செக்யூரிட்டி போர்ஸ்.
3. சென்ட்ரல் இன்வெஸ்டிகேஷன் மற்றும் செக்யூரிட்டி சர்வீசஸ்.

ஒப்பந்ததாரர் விஜய் செக்யூரிட்டி சர்விஸ் ஒப்பந்த விதிகளின்படி அரக்கு முத்திரை வைக்காமல் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட்டதாலும், ஒப்பந்ததாரர் ராஜ் செக்யூரிட்டி போர்ஸ் அவர்கள் அனுபவ சான்றிதழ் வைக்காததாலும், ஒப்பந்ததாரர் சென்ட்ரல் இன்வெஸ்டிகேஷன் மற்றும் செக்யூரிட்டி சர்வீசஸ் அவர்கள் லாப நஷ்ட கணக்கு அளிக்காததாலும் எந்த ஒப்பந்ததாரரின் தொழில் நுணுக்க உறையும் (Technical Bid) பிரிக்கப்படவில்லை.

குறுகிய கால ஒப்பம் 19.10.2007 அன்று கோரப்பட்டது அதில் 2 ஒப்பந்தங்கள் மட்டும் பெறப்பட்டன. 25.10.2007 அன்று பெறப்பட்டு 26.10.2007 அன்று 3.00 மணியளவில் வர்த்தக சம்மந்தமான உறை கூர்ந்தாய்வுக்குழுவின் முன்னிலையில் பிரிக்கப்பட்டது.

L1. ராஜ் செக்யூரிட்டி போர்ஸ் அவர்களின் வர்த்தக சம்மந்தமான உறையில் மாத சம்பளம் ஒரு நபருக்கு ரூ.1347/– (வரிகள் உட்பட) எனவும்,

L2. சென்ட்ரல் இன்வெஸ்டிகேஷன் மற்றும் செக்யூரிட்டி சர்வீசஸ் அவர்கள் வர்த்தக சம்மந்தமான உறையில் மாத சம்பளம் ஒரு நபருக்கு ரூ.1430/– (வரிகள் உட்பட) என குறிப்பிட்டிருந்தனர்.

குறைந்த விலைப்புள்ளி அளித்திருந்த ராஜ் செக்யூரிட்டி போர்ஸ் நிறுவனத்திடம் அன்றைய தினமே குறைவான விலை நிர்ணயம் செய்ய பேச்சுவார்த்தை நடத்தியதில் கூர்ந்தாய்வுக்குழு கேட்டுக்கொண்டதன்படி ரூ.1347/– லிருந்து ரூ.7/– குறைத்து மாத சம்பளம் ஒரு நபருக்கு ரூ.1340/– என குறிப்பிட்டு கடிதம் அளித்தனர்.

| ஒப்பந்ததாரர் பெயர் | மாதச் சம்பளம் ஒரு நபருக்கு (வரிகள் உட்பட) | வேலை நேரம் | ஒப்ப வைப்புத் தொகை E.M.D |
|---|---|---|---|
| ராஜ் செக்யூரிட்டி போர்ஸ் | ரூ.1,340/– (ரூ.1203.32/– 10.2 வரி ரூ.136.68/– 1,340/– | 17 மணி நேரம் (மாலை 4.00 மணி முதல் மறு நாள் காலை 9.00 மணி வரை) | ரூ. 35,000/– |

சென்னை மாநகராட்சி 65 உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு ஒரு பள்ளிக்கு இரு நபர்கள் வீதம் 65 பள்ளிகளுக்கு 2 x 65 = 130 இரவுக்காவலர்கள் பணி நியமனம் செய்யப்பட வேண்டும். இவர்கள் பணி மாலை 4.00 மணி முதல் மறுநாள் காலை 9.00 மணி வரை சனி, ஞாயிறு விடுமுறை நாட்களிலும் பணிபுரிய வேண்டும். சென்னை மாநகராட்சி பள்ளிகளில் விலை உயர்ந்த கணிப்பொறி சாதனங்கள், மின் உபகரணங்கள், தளவாடப்பொருட்கள், அறிவியல் பயிற்சி சோதனை கூடங்கள் ஆகியவற்றினை பாதுகாக்கப்பட வேண்டிய சூழ்நிலையில் ராஜ் செக்யூரிட்டி போர்ஸ் என்கின்ற நிறுவனத்தில் பணிபுரிகின்ற ஒரு காவலருக்கு ரூ.1340/– மாத சம்பளமாக நிர்ணயிக்கப்படுவதால் ஒப்பந்த விதிகளின்படி ஏற்புடையதாக கருதப்படுவதால் 1.11.2007 முதல் 31.10.2008 வரை ஒரு வருடத்திற்கு பள்ளிகளில் இரவு காவலர் பணியினை ஒப்படைக்கப்பட்டது.

**க.து.ந.க.எண்.அ1/9940/2007.**

சென்னை மாநகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் விடுமுறை நாட்களாக கோடை விடுமுறை, கிறிஸ்துமஸ் விடுமுறை, தசரா விடுமுறை ஆகிய நாட்களில் இரவுக் காவலர்கள் பகல் நேரத்திலும் பணியினை செய்யவும் அதற்காக ஊதியம் வழங்கவும் விதிகளின் அடிப்படையில் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கும் ஆணையரின் ஆணை பெறப்பட்டது.

65 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு தலா இரு காவலர்கள் வீதம் 65x 2 = 130 காவலர்களுக்கு ரூ.1340 x 130 x 12 = 20,90,400/– ( ரூபாய் இருபது இலட்சத்து தொண்ணூராயிரத்து நானூறு மட்டும்) மற்றும் விடுமுறை நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.4,18,470/– (ரூபாய் நான்கு இலட்சத்து பதினெட்டாயிரத்து நானூற்றி எழுபது மட்டும்) ஆக மொத்தம் ரூ.20,90,400 + 4,18,470 = 25,08,870/– ஆகும் (ரூபாய் இருபத்தைந்து இலட்சத்து எட்டாயிரத்து எண்ணூற்றி எழுபது மட்டும்). எனவே கீழ்கண்ட 1 முதல் 6 இனங்களுக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

1. 1.11.2007 முதல் 31.10.2008 வரை ஒரு வருடத்திற்கு ராஜ் செக்யூரிட்டி போர்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து இரவு காவலர்கள் (65 சென்னை மாநகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள்) ஒரு பள்ளிக்கு இரு காவலர்கள் வீதம் 2 x 65 = 130 இரவுக்காவலர்கள் பணி நியமனம் செய்ய அனுமதியும்,
2. இந்த 130 இரவு காவலர்களுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு காவலருக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் வரிகளுடன் ரூ.1340/– (ரூபாய் ஆயிரத்து முன்னூற்று நாற்பது மட்டும்) வழங்கவும்,
3. இவர்கள் பணி மாலை 4.00 மணி முதல் மறுநாள் காலை 9.00 மணி வரை (17 மணி வரை) சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் பணிபுரியவும்,
4. பள்ளிகளுக்கு விடுமுறை நாட்களான சனி, ஞாயிறு, கோடை விடுமுறை, கிறிஸ்துமஸ் விடுமுறை, தசரா விடுமுறை போன்ற 175 நாட்களுக்கு கூடுதலாக பகலில் ஒரு நாளைக்கு 7.00 மணி நேரம் பணிபுரிவதற்கும், ஒரு நபருக்கு ரூ.18.39/– வீதம் 130 நபருக்கு 175 நாட்களுக்கு ஆகும் தொகை ரூ.4,18,470/– (ரூபாய் நான்கு இலட்சத்து பதினெட்டாயிரத்து நானூற்றி எழுபது மட்டும்) வழங்கவும்,
5. இந்நிறுவனம் 1.11.2007 முதல் 31.10.2008 வரை அவர்கள் பணியமர்த்திய பள்ளிகளில் களவாடப்படும் பொருட்களின் நட்டத்திற்கும் அந்நிறுவனமே பொறுப்பாவர்கள் என்கின்ற விதியின் அடிப்படையில் ஒப்பந்த உடன்படிக்கை (Execution of agreement) செய்து கொள்வதற்கும்,
6. 1.11.2007 முதல் 31.10.2008 வரை ஆகும் இச்செலவுத் தொகையை, வரவு செலவு கணக்கு தலைப்பு எண்.369 பல்வகை செலவினங்கள் என்ற தலைப்பின் கீழ் (உயர், மற்றும் மேல்நிலைப்பள்ளிகள்) 2007–2008 மற்றும் 2008–2009 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

இவற்றிற்கு நிலைக்குழுக்கள் (கல்வி) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"07.05.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.42, நாள்:07.05.2008 ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"23.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.65/2008 நாள்: 23.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. "

"குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்க வேண்டுமென்பதால் மறு ஒப்பம் கோரலாம் என்ற கருத்தின் அடிப்படையில் இதனை மன்றம் ஒத்திவைக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

க.து.ந.க.எண்.அ1/2947/2008.
ஆணையர் அவர்களின் 06.05.08 நாளிட்ட குறிப்பு

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :216/2008 பொருள் எண்.10

**சென்னை மாநகராட்சி, நடுநிலைப்பள்ளிகளுக்கு 2008–09ம் கல்வியாண்டில் பாதுகாப்பு பணி மேற்கொள்ள அனுபவம் வாய்ந்த பாதுகாப்பு நிறுவனங்களை ஒப்பந்தப்புள்ளி மூலம் தேர்ந்தெடுப்பதற்கு அனுமதி வேண்டி.**

சென்னை மாநகராட்சி கல்வித் துறையில், சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளிகளின் பாதுகாப்பு நலன் கருதி இரவு காவலர் பணிக்கு திறந்தவெளி ஒப்பந்தம் மூலம் சிறந்த அனுபவம் வாய்ந்த பாதுகாப்பு நிறுவனங்களை மன்ற ஒப்புதல் மற்றும் ஆணையர் அவர்களின் ஒப்புதலுடன் ஒவ்வொரு கல்வி ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறது. இது போல் இந்த கல்வியாண்டும் (2008–09) 113 நடுநிலைப்பள்ளிகளின் பாதுகாப்பு பணிகளுக்கு ஒப்பந்தபுள்ளி மூலம் தேர்ந்தெடுக்க கடந்த கல்வியாண்டில் ஆன செலவு படி ரூ.1338/– வீதம் 12 மாதங்களுக்கு 113 நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.18,14,328/– (மாலை 4 மணி முதல் அடுத்த நாள் காலை 9 மணி வரை) தசரா, கிறிஸ்துமஸ் மற்றும் கோடை விடுமுறை நாட்கள் தோராயமாக 75 நாட்கள் (காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை) ரூ.1,55,601/– மற்றும் சனி, ஞாயிறு மற்றும் அரசினர் விடுமுறை நாட்கள் தோராயமாக 150 நாட்கள் (காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை) ரூ.3,11,202/– மொத்த செலவு ரூ.22,81,131/– கோரப்பட்டது.

இதன்படி இந்த கல்வியாண்டும் பாதுகாப்பு பணிக்கு அனுபவம் வாய்ந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மூலம் தேர்ந்தெடுப்பதற்கு கீழ்கண்டவாறு தேவைப்படுகிறது.

| வ.எண். | நாட்கள் | பணியாளர் நேரம் | மாத செலவு | மொத்த தொகை |
|---|---|---|---|---|
| 1 | 365 | மாலை 4 மணி முதல் அடுத்த நாள் காலை 9 மணி வரை | 1338 X113 X 12 மாதங்களுக்கு | 18,14,328/– |
| 2 | 75 | காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை | 18.36 X 113 X 75 நாட்களுக்கு | 1,55,601/– |
| 3 | 150 | காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை | 18.36 X113X150 நாட்களுக்கு | 3,11,202/– |
| | | | மொத்தம் | 22,81,131/– |

மேற்கண்ட செலவீனங்களுக்கு ஆகும் தொகையை வரவு செலவு கணக்கு தலைப்பு எண்.369 பல்வகைச் செலவினங்கள் என்ற தலைப்பின் கீழ் (செ.மா.ந.நி.பள்ளி) 2008–2009 நிதி ஒதுக்கீட்டில் செலவு செய்யவும், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தன்மையை கருத்தில் கொண்டு கீழ்கண்ட இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. 113 நடுநிலைப்பள்ளிகளுக்கும் பாதுகாப்பு பணி மேற்கொள்ள திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும்,

2. இந்த செலவினங்களுக்கு ஆகும் தொகையை வரவு செலவு கணக்கு தலைப்பு எண்.369 பல்வகைச் செலவினங்கள் என்ற தலைப்பின் கீழ் (செ.மா.ந.நி.பள்ளி) 2008–2009ல் நிதி ஒதுக்கீட்டில் செலவு செய்யவும்,

**க.து.ந.க.எண்.அ1/2947/2008.**

இதற்கு நிலைக்குழுக்கள் (கல்வி) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''07.05.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.45, நாள்:07.05.2008 ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''23.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.67/2008 நாள்: 23.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. ''

''குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்க வேண்டுமென்பதால் மறு ஒப்பம் கோரலாம் என்ற கருத்தின் அடிப்படையில் இதனை மன்றம் ஒத்திவைக்கின்றது''

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.

மன்றச் செயலாளர்

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/0010/08</u>**

**<u>ஆணையரின் 16.05.08 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :217/2008 பொருள் எண்:11

**<u>மழைநீர் வடிகால்வாய்கள் நீர்வழிக்கால்வாய்கள் குறித்து</u>**

சென்னை மாநகராட்சியில் மழைநீர் வடிகால்வாய்கள் நீர்வழிக்கால்வாய்கள் குறித்து ரூ.499 கோடி தொகையில் விரிவான திட்ட அறிக்கை தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு புதுடெல்லியில் மாநகராட்சி அதிகாரிகளால் திட்டம் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தை ஆய்வு செய்த மத்திய அரசின் நகர்ப்புற அமைச்சரவை அதிகாரிகள், எல்லா தொழில்நுட்ப அம்சங்களையும் கருத்தில் கொண்டு ஒரு விரிவான திட்ட அறிக்கை தயாரித்து கொடுக்குமாறு அறிவுறுத்தினார்கள். அதன்பிறகு 17.3.2008 அன்று தலைமைச்செயலகத்தில் நடந்த கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் அவர்களும் பொதுப்பணித்துறை செயலர் அவர்களும் பொதுப்பணித்துறையின் வசம் உள்ள நீர்வழிக்கால்வாய்களையும் இத்திட்டத்தில் சேர்த்து சென்னை நகருக்கு ஒரு ஒருங்கிணைந்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்குமாறு கூறினார்கள். அதன்படி ஒருங்கிணைந்த விரிவான திட்ட அறிக்கை கலந்தரிதற்குரியவரை நியமித்து தயாரிப்பதற்கும் அதற்கான செலவை மாநகராட்சியும் பொதுப்பணித்துறையும் சரிசமமாக பகிர்ந்து கொள்வதற்கும் ஆணையரின் ஆணை பெறப்பட்டது.

அதன்படி இரண்டு உறை ஒப்பங்கள் கோரப்பட்டு 23.4.2008 அன்று தொழில்நுட்ப ஒப்பங்கள் திறக்கப்பட்டன. இதில் ஏழு நிறுவனங்கள் பங்கேற்றன. தகுதி அறிக்கை தயாரிக்கப்பட்டது. 7 நிறுவனங்களில் 6 நிறுவனங்களின் நிதி ஒப்பங்கள் தகுதி பெற்றன. தகுதி பெற்ற 6 நிறுவனங்களின் நிதி ஒப்பங்கள் மட்டும் 12.5.2008 அன்று திறக்கப்பட்டன. அவற்றின் விவரம் வருமாறு.

| <u>நிறுவனம்</u> | <u>ஒப்பத்தொகை (சர்வீஸ் சார்ஜ் உள்பட)</u> |
|---|---|
| 1. ஆர்.வீ. அசோசியேட்ஸ் | ரூ.1,59,80,401/– |
| 2. வில்பர்ஸ்மித் அசோசியேட்ஸ் | ரூ.2,14,68,064/– |
| 3. ஸ்பேன் கன்சல்டன்ட் | ரூ.4,96,00,000/– |
| 4. ஷா டெக்னிக்கல் கன்சல்டன்ட் | ரூ.1,99,00,000/– |
| 5. ஸ்டுப் கன்சல்டன்ட்ஸ் | ரூ.6,82,66,326/– |
| 6. டி.டி.ஐ. கன்சல்டன்ட் | ரூ.5,81,75,118/– |

ஆர்.வீ. அசோசியட்ஸ், குறைந்த ஒப்பத்தொகை கோரியுள்ளார். அவர்களிடம் விலைகுறைப்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அவர்கள், தாங்கள் அளித்த தொகையே இறுதியானது என பதில் தெரிவித்துள்ளார். இந்தப்பொருள் தொழில்நுட்ப குழு கூட்டத்தில் 13.5.2008 அன்று விவாதிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஆர்.வீ. அசோசியட்ஸ் அளித்துள்ள ஒப்ப தொகையான ரூ.1,59,80,401/–க்கு தொழில்நுட்ப பரிந்துரை செய்தது. ஒப்பம் குழுவும் மேற்குறிப்பிட்டதை பரிந்துரை செய்தது.

மேலும் இத்தொகையை கலந்தறிதர்குரியவர்க்கு சென்னை மாநகராட்சி 50 விழுக்காடும் பொதுப்பணித்துறை 50 விழுக்காடும் அளிக்கும்.

எனவே திருவாளர். ஆர்.வீ.அசோசியட்ஸ் அவர்களுக்கு ரூ.1,59,80,401/– ஒப்பத்தொகைக்கு இப்பணியை அளிக்க ஒளிவுமறைவற்ற ஒப்பப்புள்ளி சட்டம் 1998 பிரிவு7(1)ன்படி நிலைக்குழு(பணிகள்) நிலைக்குழு(வரிவிதிப்பு) மூலம் மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> “19.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.118/2008 , நாள்: 19.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> “23.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.72/2008 நாள்: 23.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. “

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.நீ.வ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பா.து.ந.க.எண்.பி3/722/2006**
**ஆணையர் அவர்களின் 15.05.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :218/2008 பொருள் எண். 12

**சென்டாப் சாலை முதல் டர்ன்புல்ஸ் சாலை வரை மேம்பாலம் அமைக்கும் பணி – திருத்திய மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரல்**

சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த கீழ்கண்ட நான்கு சந்திப்புகளில் மேம்பாலங்கள் அமைக்க திட்டமிடப்பட்டது.

(1) வடக்கு உஸ்மான் சாலை மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர்.சாலை (கோடம்பாக்கம் நெடுஞ்சாலை) சந்திப்பு, கோட்டம் 107, மண்டலம் 7 மற்றும் கோட்டம் 119, மண்டலம் 8.
(2) உஸ்மான் சாலை மற்றும் துரைசாமி சாலை சந்திப்பு, கோட்டம் 126 மற்றும் 127, மண்டலம் 8.
(3) கோபதி நாராயணா சாலை மற்றும் திருமலை சாலை சந்திப்பு, கோட்டம் 108, மண்டலம் 7 மற்றும் கோட்டம் 126, மண்டலம் 8.
(4) பசும்பொன் முத்துரமலிங்கம் சாலை (சேமியர்ஸ் சாலை) மற்றும் டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பு, கோட்டம் 116, மண்டலம் 8.

2006ம் ஆண்டில் DEPC (Turnkey) முறையில் ஒப்பங்கள் கோரப்பட்டு, திருவாளர்கள் கேமன் இந்தியா லிமிடெட், மும்பை ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. மேற்கண்ட 4 மேம்பாலப்பணிகளுக்குமான மொத்த பணி மதிப்பு ரூ.37.72 கோடி ஆகும். மொத்த ஒப்பத்தொகை ரூ.40.81 கோடி ஆகும். தற்போது 3 மேம்பாலப்பணிகள் நடைபெற்று வருகின்றன. நான்காவது மேம்பாலப்பணியான பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை – டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் மேம்பாலப் பணி தொடங்குமுன், இச்சந்திப்பின் அருகே அமைந்துள்ள பைகிராப்ட்ஸ் நகர் நலச்சங்கம், ஸ்ரீ பால வினாயகர் பக்தர்கள் சங்கம் மற்றும் டர்ன்புல்ஸ் சாலை அடுக்குமாடி சொந்தக்காரர்கள் நலச்சங்கம் ஆகியோர் பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை வழியாக மேம்பாலம் அமைக்கப்பட்டால் உண்டாகும் பயனை விட முத்துராமலிங்கம் சாலையின் குறுக்கே சென்டாப் சாலை முதல் டர்ன்புல்ஸ் சாலை வரை மேம்பாலம் அமைக்கப்பட்டால் பெருமளவு பயனளிக்கும் என்று தங்களது கடிதங்கள் மூலம் கருத்து தெரிவித்திருந்தனர்.

பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை வழியாக மேம்பாலம் அமைக்கும் திட்டமானது சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக எடுக்கப்பட்ட வாகனப்போக்குவரத்து ஆய்வுகளின் அடிப்படையில் அமைந்த திட்டமாகும். 1998ம் ஆண்டில் எல் அண்ட் டி ராம்போல் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் அளித்த வாகனப் போக்குவரத்து ஆய்வறிக்கையில், சென்டாப் சாலை முதல் டர்ன்புல்ஸ் சாலை வரை பாலம் அமைக்கும் திட்டத்தையே முதல் பரிந்துரையாக அளித்துள்ளனர். எனினும், இத்திட்டத்தை செயல்படுத்த நிலம் கையகப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும் என தெரிவித்தது. அச்சமயம் கலந்தறிதற்குரியவர்க்கு கொடுக்கப்பட்ட முக்கிய குறிப்பானது நிலம் கையகப்படுத்துதலை தவிர்க்க வேண்டுமென்பதால், கலந்தறிதற்குரியவர்கள் இரண்டாவது பரிந்துரையாக பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை வழியாக மேம்பாலம் அமைக்கும் திட்டத்தை அளித்தது. எனினும், இச்சந்திப்பில் மேம்பாலம் கட்ட 2006ம் ஆண்டில் தான் முடிவு செய்யப்பட்டது. எனவே நலச்சங்கங்களின் கோரிக்கைக்கு இணங்க அண்ணா பல்கலைக்கழகத்தின் போக்குவரத்து பொறியியல் துறை மற்றும் கூடுதல் ஆணையர், காவல் (போக்குவரத்து) ஆகியோரிடம் கருத்துரு கோரப்பட்டது.

அண்ணா பல்கலைக்கழகம் போக்குவரத்து ஆய்வுகள் மேற்கொண்டபின் ஆய்வறிக்கையினை சமர்ப்பித்தது. அவ்வறிக்கையில் மேற்கண்ட சாலை சந்திப்பில் வாகன போக்குவரத்து அதிகம் இருக்கும் நேரங்களில், சென்டாப் சாலை மற்றும் கிழக்கு பசும்பொன் முத்துராமலிங்கம் சாலைகளை தவித எல்லா சாலைகளிலும் வாகனப்போக்குவரத்து அதிகரித்து வருகிறது. தற்போது இச்சந்திப்பில் 8000 – 9000 PCUs வாகன போக்குவரத்து உள்ளது. மேலும் இரண்டு வருடங்களில் 10000 PCUs வரை

வாகன போக்குவரத்து இருக்கும். கோட்டூர்புரம் சாலையில் மிக அதிகமாக வாகன போக்குவரத்து உள்ளது. இதனை அடுத்து நந்தனம் சாலையில் வாகன போக்குவரத்து அதிகமாக உள்ளது. தகவல் தொழில்நுட்ப சாலையில் சமீபத்திய ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள வாகன போக்குவரத்து வளர்ச்சி காரணமாக கோட்டூர்புரம் சாலை, நந்தனம் சாலை மற்றும் செனடாப் சாலையில் வாகன போக்குவரத்து மிக அதிகரித்துள்ளது. செனடாப் சாலை வழியாகவே மிக அதிகமான வாகனங்கள் செல்கின்றன. இதனை தொடர்ந்து சேமியர்ஸ் சாலையிலும், கோட்டூர்புரம் சாலையிலும் வாகனங்கள் அதிகமாக செல்கின்றன. 1998ம் ஆண்டிலிருந்து 2007ம் ஆண்டு வரையிலான காலக்கட்டத்தில் செனடாப் சாலையில் வாகன போக்குவரத்து பெருமளவு அதிகரித்துள்ளது. நந்தனத்தில் இருந்து கோட்டூர்புரம் நோக்கி திரும்பும் வாகனங்களும் அதே போல் கோட்டூர்புரத்தில் இருந்து சேமியர்ஸ் சாலை நோக்கி திரும்பும் வாகன எண்ணிக்கையை கொண்டு கோட்டூர்புரம் சாலை மிக அதிகமான வாகன போக்குவரத்தை கையாள்கிறது என்பது தெளிவாகும்.

பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை வழியாக மேம்பாலம் அமைந்தாலும் அல்லது செனடாப் சாலை – டர்ன்புல்ஸ் சாலை வழியாக மேம்பாலம் அமைந்தாலும், நந்தனம் பக்கமிருந்து டர்ன்புல்ஸ் சாலை நோக்கி வலது பக்கம் திரும்பும் வாகன போக்குவரத்தும் மற்றும் டர்ன்புல்ஸ் சாலையிலிருந்து சேமியர்ஸ் சாலைக்கு திரும்பும் வாகன போக்குவரத்தும் பாலத்தின் அடியிலேயே வேண்டிய போக்குவரத்து சிக்னல் விளக்குகளுடன் அமைய வேண்டும். எனவே, மேம்பாலத்தை செனடாப் சாலையிலிருந்து மற்றும் டர்ன்புல்ஸ் சாலை வழியாக அமைப்பதே சரியானதாகும்.

மேற்கண்டவாறு செனடாப் சாலை மற்றும் டர்ன்புல்ஸ் சாலை வழியாக மேம்பாலம் அமைக்கும் பணியினை மேற்கொள்ளும் நிலையில் போக்குவரத்து சீராக செயல்படும் விதமாக அதற்கு தேவையான நிலம் கையகப்படுத்துவது அவசியம் ஆகும் என தெரிவித்துள்ளது. நிலம் கையகப்படுத்துப்படுவது சிரமமாக இருப்பினும் மேற்கண்ட செனடாப் சாலை மற்றும் டர்ன்புல்ஸ் சாலை வழியாக மேம்பாலம் அமைக்கப்படுவதே போக்குவரத்து நெரிசலை குறைக்க சரியான வழி என தெரிவித்துள்ளது.

மேலும், கூடுதல் ஆணையர், காவல் துறை (போக்குவரத்து) அவர்களும் அண்ணா பல்கலைகழகம் அளித்த ஆய்வறைக்கையில் கூறியிருப்பதை ஆமோதித்துள்ளார்கள். தனது ஆய்வறிக்கையில் இச்சந்திப்பில் மேற்கொள்ளப்பட்ட வாகன போக்குவரத்து ஆய்வுகளின்படி பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை வழியாக மேம்பாலம் அமைப்பதற்கு பதிலாக செனடாப் சாலை மற்றும் டர்ன்புல்ஸ் சாலை வழியாக மேம்பாலம் அமைப்பதே சரியானது என தெரிவித்துள்ளார்கள்.

மேலும், கூடுதல் ஆணையர், காவல் துறை (போக்குவரத்து) அவர்கள் தனது அறிக்கையில் இந்த மாற்று திட்டத்தினால் பழைய மகாபலிபுரம் சாலையில் புதிதாக துவங்கப்படும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு செல்லும் வாகன எண்ணிக்கை உயரும் நிலையில் இம்மாற்று திட்டமானது பெருமளவு பயன்படுக்கூடியதாக அமையும் என தெரிவித்துள்ளனர். மேலும், தகவல் தொழில்நுட்ப சாலையில் சமீப காலங்களில் அதிகரித்துள்ள வாகன போக்குவரத்தை சமாளிக்க செனடாப் சாலை – டர்ன்புல்ஸ் சாலை வழியாக மேம்பாலம் அமைப்பதே பயனுள்ளதாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

எனவே, தற்போதைய போக்குவரத்து ஆய்வுகளின்படியும் போக்குவரத்து நிபுணர்களின் கருத்துகளின்படியும் பசும்பொன் முத்துராமலிங்கம் – டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் செனடாப் சாலை மற்றும் டர்ன்புல்ஸ் சாலை வழியாக மேம்பாலம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. இம்மாற்று திட்டத்தினை நடைமுறைப்படுத்த மன்றத்தின் தீர்மானம் எண்.579/2007, நாள் 28.11.2007 மூலம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேலும், ஏற்கனவே உள்ள திட்டத்தின்படி மேம்பாலத்தின் அகலம் 8மீ மற்றும் நீளம் 640மீ ஆகும். இந்த 640மீ நீளமானது பாலத்தின் மைய வீச்சளவிற்கு கிழக்கில் 20மீ நீளம் கொண்ட 8 வீச்சளவுகளும் மைய வீச்சளவுக்கு சமமான உயரத்திலேயே அமைந்திருந்தது. சாய்வு பகுதி இதன் பிறகே ஆரம்பமாகிறது. இதன் காரணமாக பாலத்தின் நீளம் 160மீ அதிகரித்திருந்தது. கலந்தறிதற்குரியவரால் வழங்கப்பட்ட இந்த வடிவமைப்பின்படி பாலத்தின் இருபுற சாலைகளிலும் வாகனங்கள் செல்ல ஏதுவாக இருக்கும். பாலத்தின் கீழே உள்ள பக்கச்சாலைகளின் குறுகிய அகலம் காரணமாக, கலந்தறிதற்குரியவர்கள் இவ்வாறு நீளத்தை அதிகரித்திருந்தனர். இப்பணியின் ஒப்பத்தொகை ரூ.9.79 கோடி ஆகும்.

அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் கூடுதல் ஆணையர், காவல் துறை (போக்குவரத்து) ஆகியோர்களால் பரிந்துரை செய்யப்பட்ட இப்பாலத்திட்டம் அதே சாலை சந்திப்பில் ஏற்கனவே உள்ள பால திட்டத்தை $90^0$ மட்டுமே திருப்பி செனடாப் சாலை முதல் டர்ன்புல்ஸ் சாலை வரை அமைப்பதாகும். பாலத்தின் நீளம் 480மீ (640மீ – 160மீ) ஆக இருக்கும். இதன் காரணமாக பணியின் ஒப்பத்தொகை சுமார் ரூ.7.00 கோடிக்கு குறைந்துவிடும். ஆனால் இந்த மாற்று திட்டத்தினை செயல்படுத்த செனடாப் சாலையில் சுமார் 1090 ச.அ. நிலம் மற்றும் டர்ன்புல்ஸ் சாலையில் சுமார் 134 ச.அ.நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். அதற்கு தோராயமாக ரூ.5.00 கோடி செலவாகும்.

இதனை தொடர்ந்து, ஒப்பக்குழுமத்தின் பரிந்துரை பின்வருபவற்றிற்கு (1) பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை – டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் ஏற்கனவே திட்டமிட்ட பாலத்தின் ஒழுங்கை $90^0$ மட்டுமே திருப்பி செனடாப் சாலை – டர்ன்புல்ஸ் சாலை வழியாக பாலம் அமைக்கும் பணியினை ஏற்கனவே திட்டத்திலுள்ள பணியாக கருதுவதா அல்லது புது பணியாக கருதுவதா மற்றும் (2) இம்மாற்று திட்டத்தை செயல்படுத்த ஏற்கனவே உள்ள பணி ஆணை வழங்கப்பட்ட ஒப்பந்ததாரரை கொண்டே பணியை மேற்கொள்ள இயலுமா அல்லது புதிதாக ஒப்பங்கள் கோரப்பட வேண்டுமா என் கோரப்பட்டது.

ஒப்பக்குழுமம் மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் விரிவான கலந்தாய்விற்கு பிறகு பாலத்தின் ஒழுங்கு (alignment) மட்டுமே மாற்றப்படுவதால் ஒரு மாற்றத்துடன் ஏற்கனவே உள்ள அதே பணியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என கீழ்க்கண்ட காரணங்களுக்காக பரிந்துரை செய்தது.

பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை வழியாக மேம்பாலம் அமைந்தாலும், செனடாப் சாலை வழியாக மேம்பாலம் அமைந்தாலும், இத்திட்டமானது பசும்பொன் முத்துராமலிங்கம் – டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் வாகன போக்குவரத்தை சீரமைப்பதற்கே, வருங்கால வாகனப் போக்குவரத்தை கருத்தில் கொண்டே சரியான மேம்பால ஒழுங்கை நிர்ணயிக்க வேண்டும். அண்ணா பல்கலைக்கழகம் சரியான மேம்பால ஒழுங்கு செனடாப் சாலை – டர்ன்புல்ஸ் சாலை வழியே மேம்பாலம் அமைப்பதாகும் என்று அறிக்கை அறித்துள்ளனர். இதனையே கூடுதல் ஆணையர் காவல் (போக்குவரத்து) துறை அவர்களும் உறுதிபடுத்தியுள்ளார். ஏற்கனவே திட்டமிட்ட அதே சந்திப்பில், மேம்பாலத்தில் ஒழுங்கை மட்டுமே $90^0$ திருப்பி செயல்படுத்தும் பணியை புதிய பணியாக கருதாமல், ஒரு மாற்றத்துடன் ஏற்கனவே உள்ள அதே பணியாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

மேலும், பால ஒழுங்கு எந்த வழியாக இருந்தாலும் தொழில்நுட்ப ரீதியான பாலத்தின் அளவுகளிலும், பாலம் கட்டுமான முறையிலும் மாற்றம் இல்லாததாலும், இப்பணி ஒரு மாற்றத்துடனான பழைய பணி என்பதாலும் ஒப்பக்குழுமம், புதிய ஒப்பங்கள் கோர வேண்டிய வாய்ப்பில்லை என்றும் ஏற்கனவே உள்ள பணி ஆணை வழங்கப்பட்ட ஒப்பந்ததார் மூலமாக இப்பணியை புதிய ஒழுங்கில் அதாவது பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை வழியில் அமைப்பதற்கு பதிலாக செனடாப் சாலையில் அமைக்க ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்த உடண்படிக்கையின்படி இப்பணிக்கு செலவாகும் தொகையினை பாலத்தின் மாற்று ஒழுங்குடனான இந்தப் பாலப்பணியை ஒப்பந்ததாரருக்கு வழங்க ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தில் சில மாற்றங்களுடனானது என கருதலாம் என்று பரிந்துரை செய்தது. மேலும் தற்போதைய அலுவலக விலைகளையும் தற்போதைய சந்தை நிலவர விலைகளையும் கருத்தில் கொண்டும், ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரருக்கு இப்பணியை பழைய விலைகளின்படியே மேற்கொள்ள அனுமதிப்பது சென்னை மாநகராட்சிக்கு அனுகூலம் ஆகும் என ஒப்பக்குழுமம் விவாதித்தது.

மேலும், ஒப்பக்குழுமம் இந்த பால ஒழுங்கு மாற்றத்திற்கு அரசின் நிர்வாக அனுமதி பெறவும், இந்த ஒழுங்கு மாற்றத்தினால் நிலங்களை கையகப்படுத்த வேண்டும் என்றும் இதற்கு ரூ.5.00 கோடி செலவாகும் என்றும் அரசுக்கு தெரிவிக்கவும் இப்பணியின் திருத்திய மதிப்பீட்டிற்கு அரசின் நிர்வாக அனுமதி பெறவும் பரிந்துரை செய்தது.

இதற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)யின் பரிந்துரையின்படி மன்றத்தில் 29.12.2007 அன்று அனுமதி பெறப்பட்டது. ஒப்பந்ததாரர் திருவாளர்கள் கேமன் இந்தியா லிமிடெட் அவர்களிடமிருந்து இந்த பால ஒழுங்கு மாற்றத்திற்கான விலைகள் கோரி திருத்திய மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

எனவே கீழ்கண்டவற்றிற்கு,

1. பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை – டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் பால ஒழுங்கு மாற்றமாக செனடாப் சாலை வழியே மேம்பாலம் அமைக்கும் பணிக்கு அரசின் நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்ட செனடாப் சாலை முதல் டர்ன்புல்ஸ் சாலை வழியிலான மேம்பாலம் அமைக்கும் பணியினை ஏற்கனவே பணி ஆணை வழங்கப்பட்ட ஒப்பந்ததாரரான திருவாளர்கள் கேமன் இந்திய லிமிடெட் அவர்களுக்கு அவர்கள் முன்னரே அளித்த விலை விகிதத்தின்படி வழங்க அனுமதியும்,
3. இந்த பால ஒழுங்கு மாற்றம் காரணமாக நிலங்களை கையகப்படுத்த வேண்டியுள்ளதற்கு ஆகும் செலவினத்தொகையான ரூ.5.00 கோடி வழங்க அரசின் அனுமதியும்,
4. இந்த பால ஒழுங்கு மாற்றம் காரணமாக இப்பணியின் திருத்திய மதிப்பீட்டிற்கு அரசின் நிர்வாக அனுமதியும் வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

தற்போது, மாவட்டாட்சியர் அவர்கள் இப்பாலப்பணிக்காக செனடாப் சாலை மற்றும் டர்ன்புல்ஸ் சாலையில் மொத்தம் 7கி 1425 சதுர அடி நிலங்களை கையகப்படுத்துவதற்கு மொத்த தோராய இழப்பீட்டுத் தொகை ரூ.9,70,73,490/– ஆகும் என தெரிவித்துள்ளார்கள்.

எனவே கீழ்கண்டவற்றிற்கு,

1. பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை – டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் பால ஒழுங்கு மாற்றமாக செனடாப் சாலை வழியே மேம்பாலம் அமைக்கும் பணிக்கு அரசின் நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்ட செனடாப் சாலை முதல் டர்ன்புல்ஸ் சாலை வழியிலான மேம்பாலம் அமைக்கும் பணியினை ஏற்கனவே பணி ஆணை வழங்கப்பட்ட ஒப்பந்ததாரரான திருவாளர்கள் கேமன் இந்திய லிமிடெட் அவர்களுக்கு அவர்கள் முன்னரே அளித்த விலை விகிதத்தின்படி வழங்க அனுமதியும்,
3. இந்த பால ஒழுங்கு மாற்றம் காரணமாக நிலங்களை கையகப்படுத்த வேண்டியுள்ளதற்கு ஆகும் செலவினத்தொகையான ரூ.9,70,73,490/– வழங்க மன்றத்தின் அனுமதியும், அரசின் நிர்வாக அனுமதி பெற அரசிற்கு கடிதம் எழுத அனுமதியும்,
4. இப்பணியின் திருத்திய மதிப்பீடான ரூ.19,93,00,000/–க்கு மன்றத்தின் அனுமதியும், அரசின் நிர்வாக அனுமதி பெற அரசிற்கு கடிதம் எழுத அனுமதியும் வேண்டி

மேற்குறிப்பிட்ட 1 முதல் 4 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.116/2008 , நாள்: 19.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“23.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.73/2008 நாள்: 23.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. “

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**திி.க.மே.து.ந.க.எண்.எ7/300/2008**
**ஆணையரின் 17.05.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :219/2008 பொருள் எண்:13

**பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் மதில் சுவர் அமைக்கும் பணி(பகுதி–3)**

கோட்டம்–155, பகுதி 10, மண்டலம் 10, பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில்புதியதாக மதில் சுவர் (பகுதி 3) **கிழக்கில் சுற்று வட்ட சாலையிலிருந்து பிரதான கதவு வரை** அமைக்கும் பணிக்காக ரூ.38,80,000/–க்கு 2007–2008(தெற்கு) அலுவலக விலைப்பட்டியலை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்டது. பின்னர், இந்த பணிக்காக 25.4.2008 அன்று மொத்தம் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவைகளின் விவரம் கீழ்வருமாறு

| ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம் | | | | |
|---|---|---|---|---|
| வ.எ | ஒப்பந்தத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு ரூபாய் | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை ரூபாய் | 2007–2008ம் ஆண்டு விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
| 1 | திரு. டி. வெங்கடேசன் | 33,46,564 | 49,52,914/– | (+) 48% |
| 2 | திருவாளர்கள். வி.ஆர்.கே. பில்டர்ஸ் | 33,46,564 | 48,52,518/– | (+)45% |

குறைந்த ஒப்பம் அளித்துள்ள திருவாளர்கள் வி.ஆர்.கே. பில்டர்ஸ் அவர்களுடன் 28.04.2008, 03.05.2008 மற்றும் 12.05.2008 ஆகிய தேதிகளில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. அவர்களுடன் நடத்தப்பட்ட இறுதி பேச்சு வார்த்தைக்குப் பிறகு அவர்கள் அலுவலக விலைவிகிதத்திற்கு (+)35.00% கோரியுள்ளனர். அதன்படி அவர்களின் ஒப்பத்தொகை ரூ.45,17,861/– ஆகும்.

ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டவுடன் நாளிதழ்களில் வெளிவரும் சந்தை விலைவிகிதங்களின் படி இந்தப்பணிக்கான சந்தை மதிப்பு ரூ.53,02,200/– ஆகிறது. இத்தொகை அலுவலக மதிப்பீட்டை விட 58.44% கூடுதலாகும்.

இப்பணிக்கு திருவாளர்கள் வி. ஆர். கே. பில்டர்ஸ் பேச்சு வார்த்தைக்குப் பிறகு அவர்கள் அளித்த ஒப்ப விழுக்காடு (+)35.00 % சந்தை விலையை விட 14.79% குறைவாகும்.

ஏனவே, திருவாளர்கள். வி. ஆர். கே. பில்டர்ஸ் அவர்களின் இப்பணிக்கான ஒப்பத்தை மேற்சொன்ன ஒப்ப விழுக்காடான 2007–2008ஆம் ஆண்டிற்கான விலைவிகிதத்தை விட (+)35.00%க்கு மேற்சொன்ன ஒப்பத் தொகையான ரூ.45,17,861/–க்கு தொழில்நுட்பக்குழு 16.05.2008 அன்று பரிந்துரைத்துள்ளது.

ஏனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு. திருவாளர்கள். வி. ஆர். கே. பில்டர்ஸ் அவர்கள் மூன்றாவது பேச்சு வார்த்தைக்குப் பிறகு அளித்த ஒப்ப விழுக்காடு (+) 35.00 %க்கு இவ்வலுவலக 2007–2008–ம் ஆண்டு(தெற்கு) திட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகமாக இவ்வொப்பந்தத்தை திருவாளர்கள். வி. ஆர். கே. பில்டர்ஸ் அவர்களுக்கு ரூ.45,17,861/–க்கு (ரூபாய் நாற்பத்தைந்து இலட்சத்து பதினேழாயிரத்து எண்ணூற்று அறுபத்தொன்று மட்டும்)க்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.120/2008 , நாள்: 19.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"23.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.74/2008 நாள்: 23.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**திக.மே.து.ந.க.எண்.எ7/299/2008**
**ஆணையரின் 17.05.2008 நாளிட்ட குறிப்பு**

## 19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :220/2008 பொருள் எண்:14

### பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் மதில் சுவர் அமைக்கும் பணி(பகுதி–2)

கோட்டம்–155, பகுதி 10, மண்டலம் 10, பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில்புதியதாக மதில் சுவர் (பகுதி 2) 850 மீட்டர் முதல் 1700 மீட்டர் வரை) கிழக்குமார்க்கமாக அமைக்கும் பணிக்காக ரூ.38,80,000/–க்கு 2007–2008(தெற்கு) அலுவலக விலைப்பட்டியலை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்டது. பின்னர், இந்த பணிக்காக 25.4.2008 அன்று மொத்தம் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவைகளின் விவரம் கீழ்வருமாறு

| ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம் | | | | |
|---|---|---|---|---|
| வ.எ | ஒப்பந்தத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு ரூபாய் | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை ரூபாய் | 2007–2008ம் ஆண்டு விலைவிகிதம் விழுக்காடு அதிகம் /குறைவு |
| 1 | திரு. டி. வெங்கடேசன் | 33,46,564 | 49,52,914/– | (+) 48% |
| 2 | திருவாளர்கள். வி.ஆர்.கே. பில்டர்ஸ் | 33,46,564 | 48,52,518/– | (+)45% |

குறைந்த ஒப்பம் அளித்துள்ள திருவாளர்கள் வி.ஆர்.கே. பில்டர்ஸ் அவர்களுடன் 28.04.2008, 03.05.2008 மற்றும் 12.05.2008 ஆகிய தேதிகளில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. அவர்களுடன் நடத்தப்பட்ட இறுதி பேச்சு வார்த்தைக்குப் பிறகு அவர்கள் அலுவலக விலைவிகிதத்திற்கு (+)35.00% கோரியுள்ளனர். அதன்படி அவர்களின் ஒப்பத்தொகை ரூ.45,17,861/– ஆகும்.

ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டவுடன் நாளிதழ்களில் வெளிவரும் சந்தை விலைவிகிதங்களின் படி இந்தப்பணிக்கான சந்தை மதிப்பு ரூ.53,02,200/– ஆகிறது. இத்தொகை அலுவலக மதிப்பீட்டை விட 58.44% கூடுதலாகும்.

இப்பணிக்கு திருவாளர்கள் வி. ஆர். கே. பில்டர்ஸ் பேச்சு வார்த்தைக்குப் பிறகு அவர்கள் அளித்த ஒப்ப விழுக்காடு (+)35.00 % சந்தை விலையை விட 14.79% குறைவாகும்.

ஏனவே, திருவாளர்கள். வி. ஆர். கே. பில்டர்ஸ் அவர்களின் இப்பணிக்கான ஒப்பத்தை மேற்சொன்ன ஒப்ப விழுக்காடான 2007–2008ஆம் ஆண்டிற்கான விலைவிகிதத்தை விட (+)35.00%க்கு மேற்சொன்ன ஒப்பத் தொகையான ரூ.45,17,861/–க்கு தொழில்நுட்பக்குழு 16.05.2008 அன்று பரிந்துரைத்துள்ளது.

ஏனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு. திருவாளர்கள். வி. ஆர். கே. பில்டர்ஸ் அவர்கள் மூன்றாவது பேச்சு வார்த்தைக்குப் பிறகு அளித்த ஒப்ப விழுக்காடு (+) 35.00 %க்கு இவ்வலுவலக 2007–2008–ம் ஆண்டு(தெற்கு) திட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகமாக இவ்வொப்பந்தத்தை திருவாளர்கள். வி. ஆர். கே. பில்டர்ஸ் அவர்களுக்கு ரூ.45,17,861/–க்கு (ரூபாய் நாற்பத்தைந்து இலட்சத்து பதினேழாயிரத்து எண்ணூற்று அறுபத்தொன்று மட்டும்)க்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

> "19.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.119/2008, நாள்: 19.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

> "23.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.75/2008 நாள்: 23.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>தி.க.மே.து.ந.க.எண்.எ7/ 1340 /2008</u>**
**<u>ஆணையரின் குறிப்பு நாள்: 08.04.2008</u>**

**<u>19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :221/2008 பொருள் எண்: 15

**<u>துப்புரவு பணியாளர்களுக்கு ஆண்டு ஒன்றிற்கு இரண்டு ஜதை சீருடை வழங்குதல்</u>**

2008—2009ம் ஆண்டு சென்னை மாநகராட்சி நிதிநிலை தொடக்க உரை அறிவிப்பில் திடக்கழிவு மேலாண்மைத் துறைக்கு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் ஒன்று துப்புரவு பணியாளர்களுக்கு ஆண்டு ஒன்றிற்கு இரண்டு ஜோடி சீருடை வழங்குதல் தொடர்பாக கீழ்கண்டவாறு அறிவிக்கப்பட்டுள்ளது

**<u>சிங்காரச் சென்னைக்கு சீருடை</u>**

சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து களப்பணி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மிடுக்கான காலத்திற்கேற்ற ஒரே மாதிரியான சீருடை தேசிய புதுமை தொழில் நுட்ப கழகம் மூலம் வடிவமைக்கப்பட்டு வருகின்றது. அதன் மூலம் ஒரே நிறம், ஒரே தரம் என 'சிங்கார சென்னையை' உருவாக்க அனைத்து களப்பணி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களும் புத்தம் புது சீருடையில் 2008—2009லிருந்து பணியாற்றுவர்.

தற்பொழுது துப்புரவு பணியாளர்களுக்கு சீருடை இரண்டு ஆண்டிற்கு ஒருமுறை இரண்டு ஜோடி வழங்கப்பட்டு வருகிறது. துப்புரவு பணி என்பது உன்னதமான பணியாகும். துப்புரவு பணியாளர்களுக்கு வருடத்திற்கு இரண்டு சீருடை வழங்கினால் துப்புரவு பணியாளர்கள் மிகவும் மனநிறைவும் மனமகிழ்ச்சியும் அடைவார்கள். அதுமட்டுமன்றி துப்புரவு பணியாளர்கள் தூய்மை பணியில் ஈடுபடும் போது மாற்றி மாற்றி உடுத்துவதற்கு வசதியாக இருக்கும். அதுமட்டுமல்லாமல் துப்புரவு பணியாளர்கள் நகரை தூய்மை படுத்தும் போதும் காண்பதற்கும் அழகாக இருக்கும்.

எனவே 2008—2009ம் ஆண்டின் சென்னை மாநகராட்சி நிதிநிலை அறிவிப்பின்படி சென்னை மாநகராட்சியில் பணிபுரிகின்ற அனைத்து துப்புரவு பணியாளர்களுக்கும் ஆண்டிற்கு இரண்டு ஜதை சீருடை வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி.ம.நி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.112/2008 , நாள்: 19.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"23.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.76/2008 நாள்: 23.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**தி.க.மே.து.ந.க.எண்.எ7/1297 /2008**
**ஆணையரின் குறிப்பு நாள்: 08.04.2008**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :222/2008 பொருள் எண்:16

**குப்பையினை பொதுமக்கள் தரம் பிரிப்பதற்கு மண்டலம்–1, 2, 4, 5, 7 மற்றும் 9ல் உள்ள அனைத்து குடிசை பகுதிகளிலுள்ள ஒவ்வொரு இல்லங்களுக்கும் சிகப்பு மற்றும் பச்சை நிறத்தில் குப்பை வாளிகள் வழங்குவதற்கு அனுமதி வேண்டுதல்**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள நகராட்சி (திடக்கழிவுகள் மேலாண்மை மற்றும் கையாளல்) விதிகள் 2000 ன்படி குப்பையை உருவாக்குபவர்கள் தங்கள் இல்லங்களிலேயே தரம் பிரித்து வழங்கவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. எனவே இந்த விதியினை சென்னை மாநகராட்சியில் அமுல்படுத்த 2008–2009ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் திடக்கழிவு மேலாண்மைத்துறை தொடர்பான பொருட்பாட்டில் குப்பையினை தரம் பிரித்தல் குறித்து அனைத்து குடிசை பகுதிகளிலுள்ள வீடுகளுக்கும் பொதுமக்களை ஊக்குவிக்க தலா இரண்டு குப்பை வாளிகள் வழங்குவது தொடர்பாக கீழ்வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

**தரம் பிரித்தலில் தரம் மேம்பாடு**

சென்னை மாநகராட்சியில் தான் இந்தியாவிலேயே முதன் முதலாய் ஒவ்வொரு வீட்டிற்கும் ‘தரம் பிரித்தல்’ என்னும் தாரக மந்திரத்தை மனதிலே நிரந்தரமாய்த் தங்கச் செய்யும் வண்ணம் தலா இரண்டு குப்பை வாளிகள் சிவப்பு மற்றும் பச்சை நிறத்தில் மக்காத, மக்கும் குப்பைகளுக்காக வழங்கப்படும்.

இதன்மூலம் குப்பைகள் போடும் பொழுதே அவை பிரிந்து விடுவதால் ஏராளமான பொன்னான மணித்துளிகள் மீதமாகும். மேலும் தரம் பிரிப்பது ஒரு பணியாகத் தெரியாது. மண்டலம்–1,2,4,5 ,7 மற்றும் 9ல் உள்ள அனைத்து குடிசைப் பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு தலா இரண்டு குப்பை வாளிகள் வழங்கப்படும்.

குப்பை உருவாகும் இடத்திலேயே மக்கும் குப்பை என்றும், மறுசுழற்சிக்கு பயன்படும் குப்பை என்றும் தனித்தனியே பிரிக்கப்படுவதால் மறு சுழற்சிக்கு பயன்படும் கழிவுகளை கொண்டு தொழிலகங்கள் நடத்துபவர்களுக்கு திருப்பப்படலாம். மக்கும் குப்பை உரமாக மாற்ற பயன்படுத்தப்படலாம். குப்பை தரம் பிரிக்கப்படுவதால் குப்பை கொட்டும் வளாகங்களில் மக்காத குப்பை கொட்டப்படுவது தடுக்கப்படும். இவ்வாறு குப்பையை தரம்பிரித்து குப்பை கொட்டும் வளாகங்களில் களைவதால் பல நன்மைகள் ஏற்படுகிறது. அதாவது குப்பை கொட்டும் வளாகத்தின் ஆயுள் காலம் அதிகமாகும், மேலும் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும். காற்று மற்றும் நிலத்திடி நீர் மாசுபடுவதும் தடுக்கப்படும். குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை பொறுக்குபவர்களால் குப்பை எரிப்பதும் தடுக்கப்படும். இத்திட்டத்தை முதல் கட்டமாக செயல்படுத்தவும், பொதுமக்கள் இத்திட்டத்தினை அமுல்படுத்த ஊக்குவிக்கும் பொருட்டு சென்னை மாநகராட்சியில் மண்டலம்–1,2,4,5,7 மற்றும் 9ல் உள்ள அனைத்து குடிசை பகுதிகளிலுள்ள வீடுகளுக்கும் தலா இரண்டு குப்பை வாளிகள் ஒருமுறை வழங்கலாம். இதற்கான நிதியினை சென்னை மாநகராட்சி தனது நிதியிலிருந்து செலவிடலாம். இந்த திட்டம் பொதுமக்களிடையே குப்பையை தரம் பிரிக்க வேண்டும் என்ற எண்ணத்திற்கு ஊக்கம் அளிக்கும்.

மேற்கண்ட கருத்துக்கள் ஏற்கபடின் சென்னை மாநகராட்சி மண்டலம்–1,2,4,5,7 மற்றும் 9ல் உள்ள அனைத்து குடிசை பகுதிகளிலுள்ள வீடுகளுக்கும் தலா இரண்டு குப்பை வாளிகள் (சிகப்பு மற்றும் பச்சை நிறங்களில்) ஒருமுறை மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு பணிகள் மற்றம் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.111/2008 , நாள்: 19.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“23.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.77/2008 நாள்: 23.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. “

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொது.ந.க.எண்.பி3/7635/08**
**ஆணையரின் 14.05.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :223/2008 பொருள் எண்: 17

**அரசாணை அமலாக்கம்**

அரசாணை எண் 191, நிதி(ஓய்வூதியம்)துறை, நாள்: 16.03.1996–ன் படி மாநில அரசில் குடும்ப ஓய்வூதியம் பெற்று வரும் மத்திய அரசு மற்றும் மாநில அரசு, உள்ளாட்சித் துறைகளில் பணியாற்றி வரும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு அன்னார் பெற்று வரும் அடிப்படை குடும்ப ஓய்வூதியத்துடன் அளிக்கப்பட்டு வந்த அகவிலைப்படி அவ்வரசாணை வெளியிடப்பட்ட நாள் முதல் (16.03.96) நிறுத்தம் செய்யப்பட்டது.

இந்திய அரசின் அலுவலக குறிப்பாணையின் படி தற்போது வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண் 112, நிதி(ஓய்வூதியம்) துறை, நாள் 24.03.2008ல் மத்திய மற்றும் மாநில அரசுப்பணியில் பணியாற்றிக்கொண்டு குடும்ப ஓய்வூதியம் பெற்று வரும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அவர்கள் பெற்றுவரும் அடிப்படை குடும்ப ஓய்வூதியத்துடன் 50 சதவிகித குடும்ப ஓய்வூதிய அகவிலைப்படியுடன் சேர்த்து அரசு அவ்வப்போது வெளியிடப்படும் அரசாணைகளின் படி அதற்குரிய அகவிலைப்படியை மீண்டும் அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வாணை இவ்வரசாணை வெளியிடப்பட்ட நாள் (24.03.2008) முதல் அமலாக்கம் செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய, மாநில அரசுப்பணி மற்றும் உள்ளாட்சித்துறைகளில் பணிபுரிந்துக் கொண்டு சென்னை மாநகராட்சியில் குடும்ப ஓய்வூதியம் பெற்று வரும் குடும்ப ஓய்வூதியர்களில் தோராயமாக 873 நபர்கள் அடிப்படை குடும்ப ஓய்வூதியம் மட்டும் பெற்று வருகிறார்கள். மேற்படி அரசாணையை நடைமுறைப்படுத்தி அவர்களுக்கு 50% குடும்ப ஓய்வூதிய அகவிலைப்படியுடன் சேர்த்து மற்றும் அகவிலைப்படி கணக்கிட்டு வழங்க ஒரு மாதத்திற்கு ரூ.14 இலட்சம் விகிதம் ஓர் ஆண்டிற்கு ரூ.1.68 கோடி செலவாகும்.

எனவே, அரசாணை எண் 112, நிதி(ஓய்வூதியம்) துறை, நாள் 24.03.2008–னை சென்னை மாநகராட்சி குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் நடைமுறைப்படுத்தும் பொருட்டு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.80/2008 நாள்: 23.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.க.கு.ந.க.எண்.அ8/1925/2008.**
**ஆணையாளரின் 11 / 04 / 2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :224/2008 பொருள் எண்:18

**அரசாணை அமலாக்கத்திற்கு பின்னேற்பு அனுமதி வேண்டி**

22.03.2008 நாளிட்ட அரசாணை எண்.107 நிதி (படிகள்) துறையின்படி, ஜனவரி 2008 முதல் அகவிலைப்படி 41 விழுக்காடிலிருந்து 47 விழுக்காடுகள் உயர்த்தி வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வரசாணையில் 01.01.2008 முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படியை ரொக்கமாக வழங்கலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு சமர்ப்பிப்பது யாதெனில், அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு அகவிலைப்படியை அரசாணையின் பிற்சேர்க்கையில் குறிப்பிட்டுள்ளவாறு வழங்கப்படல் வேண்டும் எனவும், அட்டவணை கலம் 1ல் குறிப்பிட்டுள்ள இரு அடிப்படை ஊதியத்திற்கு இடைப்பட்ட ஊதியத்திற்கு அரசு அறிவித்த 47 விழுக்காடுக்கு கணக்கிட்டு வழங்கப்படல் வேண்டும் என்றும் வித்தியாச தொகை ஐம்பது பைசாவிற்கு மேல் வந்தால் அதற்கு அடுத்த நிலையில் உயர்த்தி அளிக்கவும், கணக்கிடப்படும் தொகை 50 பைசாவுக்கு கீழ் வந்தால் அத்தொகையினை பொருட்படுத்தாமல் விட்டு விடவும் ஆணையிடப்பட்டுள்ளது.

இவ்வரசாணை சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கும் பொருந்தும் என்பதால், இவ்வராசாணை சென்னை மாநகராட்சியில் மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இவ்வரசாணையில், ஏற்கனவே அகவிலைப்படி பெறும் சில்லறை செலவினத்தில் குறிப்பட்ட மாத சம்பளம் பெறும் முழுநேர பணியாளர்களுக்கு பொருந்தும் மற்றும் பகுதி நேர பணியாளர்களுக்கு பொருந்தாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அகவிலைப்படி உயர்த்தப்பட்டு வெளியிடப்பட்ட இவ்வரசாணை மான்யம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்களுக்கும் உள்ளாட்சி மன்றங்களின் பணியாளர்களுக்கும் பல்கலைகழக மான்ய குழு / அனைத்து இந்திய தொழிற் நுட்ப கல்வி குழு சம்பள விகிதங்களின் கீழ்வரும் பணியாளர்களுக்கும் அரசு மற்றும் மான்யம் பெறும் பல் தொழில் பயிற்சி பள்ளிகள், சிறப்பு பட்டயப்படிப்பு நிறுவனங்களில் பாணியாற்றும் ஆசிரியர்கள் / உடற்பயிற்சி இயக்குநர்கள் / நூலகர்கள் ஆகியோர்க்கும் வருவாய் துறையிலுள்ள கிராம உதவியாளர்களுக்கும், மதிய உணவு அமைப்பாளர்கள் சிறுவர் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்களுக்கும் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறையின் கீழுள்ள கிராம பஞ்சாயத்துகளில் பணிபுரியும் உதவியாளர்கள் / எழுத்தர்களுக்கும் பொருந்தும்.

மேலும் இந்த அகவிலைப்படிக்கான ஜனவரி 2008 மற்றும் பிப்ரவரி 2008ற்கான நிலுவைத் தொகையினை மார்ச் 2008ற்குள் பெற்று வழங்கப்பட கூடாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது .

இந்த அகவிலைப்படியினால் சென்னை மாநகராட்சிக்கு ஆண்டொன்றுக்கு ஆகும் கூடுதல் செலவீனம் ரூ.7–12 கோடியாகும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

எனவே, அரசாணை எண்.107, நிதி (படிகள்) துறை நாள் 22.03.2008–யினை சென்னை மாநகராட்சியில் 01.01.2008 முதல் நடைமுறைப்படுத்தியதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.69/2008 நாள்: 23.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. "

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.க.கு.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**க.து.ந.க.எண்.அ1/ 1244 /1998**

**ஆணையர் அவர்களின்01.04.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :225/2008 பொருள் எண்.19

**சென்னை மாநகராட்சி கல்வித்துறையில் பணியாற்றிய திரு. பி . முனிரத்தினம் (ஓய்வு)தலைமை ஆசிரியர் , செ.மா. மே. பள்ளி ஜி. கோயில் தெரு. கல்வித்துறை மன்ற உறுப்பினர் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் 1998 ஆம் ஆண்டு நீலகிரி மலை ஏறும் பயிற்சிக்கு சென்று வந்ததற்கு பெறப்பட்ட முன்பணம் ரூ.90,600/– ஐ சரி செய்யவும் இந்நிகழ்ச்சிக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி**

சென்னை மாநகராட்சி கல்வித்துறையில் மன்ற உறுப்பினர் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் நீலகிரி மலை ஏறும் நிகழ்ச்சிக்கு கணக்கு குறியீடு எண்.803ல் முன்பணமான ரூ.70,600/– மற்றும் ரூ.20,000/– கணக்கு குறியீடு எண்.369 பல்வகைச் செலவினங்கள் நடுநிலைப்பள்ளி என்ற தலைப்பில் இருந்து பி.ப்பி.வி. எண்.இ238/2.11.98 நாளன்று பெறப்பட்டது. இதில் ரூ.70,600/– யை மத்திய அரசு விளையாட்டுத்துறையில் கொடுப்பதாகவும் இதில் முன்பணமாக ரூ.52,950/– சென்னை மாநகராட்சிக்கு மத்திய அரசு விளையாட்டுத் துறையில் இருந்து பெறப்பட்டு கணக்கு குறியீடு 803ல் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் 24.02.99 அன்று திரும்ப செலுத்தப்பட்டது போக மீதமுள்ள தொகை ரூ.17,650/– ஐ பட்டயக்கணக்கர் சான்றிதழ் பெற்று இத்தொகையினை பெற்றுக் கொள்ளலாம் என மத்திய அரசு விளையாட்டுத் துறை தெரிவித்ததின்படி பட்டயக்கணக்கர் மூலம் பயனீட்டு சான்றிதழ் பெறப்பட்டு மத்திய அரசு விளையாட்டுத் துறைக்கு அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொகை ரூ.17,650/– மத்திய அரசு விளையாட்டு துறையிலிருந்து பெறப்படாத சூழ்நிலையில் உள்ளது.

**செலவு செய்த விவரங்கள் பின்வருமாறு**

| | |
|---|---|
| 1. பயணப்படி மற்றும் ஊர்தி செலவு<br>(Divine Travels) 177, Syrian Kandthu Colony<br>Sathy Road, Coimbatore. | Rs.44,000/- |
| 2. Boarding and Lodging. M/s. Manjula Travels<br>36, V.R. Pillai Koil Street, Chennai – 05<br>(30,000+12,500=42,500) | Rs.42,500/- |
| 3. இதரச் செலவுகள்<br>Kandan Arts, 17, V.V. Koil Street, Choolai<br>Chennai 600 112. | Rs. 2,600/- |
| 4. சான்றிதழ் செலவு<br>R.P. Madhu (Charted Accountant)<br>W.123, 1st Floor, Anna Nagar West. | Rs. 1,500/- |
| | Rs.90,600/- |

மேற்கண்ட மொத்த தொகை ரூ.90,600/– க்கு நகல் பட்டியலை வைத்து சரி செய்ய கீழ் கண்ட இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) வரிவிதிப்பு மற்றும் நிதி மூலமாக அனுமதி வேண்டப்படுகிறது.

1. மன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் 98–99 ஆம் ஆண்டு நீலகிரி மலை ஏறுவதற்கு மத்திய அரசு விளையாட்டு துறையில் ரூ.70,600/– ஐ அனுமதித்து முன்பணமாக ரூ.52,950/– ஐ பெறப்பட்டு சென்னை மாநகராட்சி கரூவூலத்தில் செலுத்தப்பட்டது. மீதமுள்ள ரூ.17,650/– ஐ மீள பெற வாய்ப்பு இல்லாததால் இத்தொகையினை திரு. பி. முனிரத்தினம் (ஓய்வு) தலைமையாசிரியர் அவர்களிடமிருந்து பிடித்தம் செய்யவும்,

2. மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட ரூ.52,950/– மற்றும் சென்னை மாநகராட்சி பங்கு தொகை ரூ.20,000/– ஆக மொத்தம் ரூ.72,950/– ஐ கணக்கு குறியீடு எண்.369 பல்வகைச் செலவினங்கள் நடுநிலைப்பள்ளி 2007–2008 ஆம் நிதியாண்டில் சரிசெய்யவும்,

3. இந்த மூலக்கோப்பு கிடைக்கப்பெறாததால் நகல் பட்டியல் கோப்பை கொண்டு சரி செய்வதற்கும்,

4. மேலும், மன்ற உறுப்பினர் மற்றும் அலுவலர்களும் மலை ஏறும் பயிற்சிக்கு சென்று வந்ததற்கு பின்னேற்பாணை வேண்டியும்,

நிலைக்குழுக்கள் (கல்வி) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"07.05.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.44, நாள்:07.05.2008 ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"23.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.66/2008 நாள்: 23.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. "

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மை.து.ந.க.எண்.ஜி2/372/2008.
ஆணையாளர் அவர்களின் 28.04.2008 நாளிட்ட குறிப்பு

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :226/2008 பொருள் எண். 20

**சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் அமர்வுப்படி உயர்த்தி வழங்குவது**

சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களுக்கு மன்றக்கூட்டத்திற்கு ரூ.800/– அமர்வுப்படியாக வழங்கப்பட்டு வருவதை ரூ.1000/– ஆக உயர்த்தி வழங்கப்படுமென்றும், மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் வார்டுகுழு கூட்டத்திற்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் அமர்வுப்படி ரூ.50/–லிருந்து ரூ.500/– ஆக உயர்த்தி வழங்கப்படுமென்றும் மேலும் அதே போன்று நிலைக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ளும் மாமன்ற உறுப்பினர்களுக்கும் ரூ.500/– அமர்வுப்படியாக வழங்கப்படும் என வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 2008–2009ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீதான பதிலுரையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உரிய ஆணை பிறப்பிக்க அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பியதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.63/2008 நாள்: 23.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. “

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>ம.து.ந.க.எண்.ஜி2/504/2008.</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 28.04.2008 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :227/2008 பொருள் எண்.21

**<u>தமிழ்நாடு நகராட்சி சட்டம் திருத்தம்</u>**

சென்னை மாநகராட்சி முனிசிபல் கார்ப்பரேஷன் சட்டம் 1919 பிரிவு 43ஏ மற்றும் 358ஏ ஐ நீக்கம் செய்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள சட்ட திருத்தம் டி.எண். விதி 9/08ஐ (T.N.Act – 9 of 2008) நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி ) மூலமாக மன்றத்தின் பதிவிற்கும், தகவலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

> "23.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.64/2008 நாள்: 23.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரைத்து மன்றத்தின் பதிவிற்கும், தகவலுக்கும் சமர்ப்பிக்கின்றது. "

''இதனை மன்றம் பதிவு செய்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**வ.து.ந.க.எண்.ஜி1/5464/2008**
**ஆணையரின் 16.05.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :228/2008 பொருள் எண்.22

**விண்ணப்ப படிவங்கள் இலவசமாக வழங்குதல்**

வருவாய்த் துறை சம்பந்தப்பட்ட விண்ணப்ப படிவங்கள் 1) (படிவம் எண்–9) சொத்து உரிமையாளர் பெயர் மாற்றம் (2) வியாபார உரிமம் வழங்குதல் படிவம் (3) (படிவம் எண்–8) சொத்துவரி பிரித்தல் படிவம் ஆகிய படிவங்கள் முறையே ரூ.10/–, ரூ.50/– மற்றும் ரூ.100/– என்ற விலையில் தற்பொழுது விற்கப்படும் படிவங்களை பொதுமக்களுக்கு நன்மை அளிக்கும் வகையில் இப்படிவங்களை இலவசமாக பொதுமக்களுக்கு வழங்க நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"23.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.81/2008 நாள்: 23.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

" இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: வ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/2426/2005
ஆணையர் (பொறுப்பு) அவர்களின் 07.05.2008 நாளிட்ட குறிப்பு

19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :229/2008 பொருள் எண்:23

திறந்தவெளி நிலம் எடுத்தல்

சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் கட்டட வரைபட அனுமதிகள் வழங்கும்போது கட்டட உரிமையாளர்களிடமிருந்து சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் நேரடியாக எடுத்துக்கொண்ட திறந்த வெளி நிலங்களை சென்னை மாநகராட்சியின் பராமரிப்புக்கு எடுத்துக்கொள்வதற்கு 19.06.07 நாளிட்ட கடிதத்தில் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் கேட்டுக் கொண்டது.

சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் இவ்வாறு நேரடியாக எடுத்துக்கொண்ட 74 இடங்களிலுள்ள திறந்த வெளி நிலங்களை புலத்தணிக்கை செய்து, பரப்பளவு விவரங்கள் சரிபார்த்து, ஆக்கிரமிப்பு விவரத்தினையும் கண்டறிந்து இந்நிலங்கள் பொது மக்கள் பயன்படுத்தும் விதத்தில் இருக்கும் பட்சத்தில் இந்நிலங்களை சென்னை மாநகராட்சி பராமரிப்புக்கு எடுத்துக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதியினை பெறுவதற்காக வார்டு குழுக்களின் பரிந்துரைகளை பெற்று அனுப்பி வைக்குமாறு அனைத்து மண்டல அலுவலர்களிடமும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதன் பேரில் 10வது மண்டல வார்டு குழு தீர்மானம் எண்.183/08 நாள் 25.02.2008ல் கீழ் கண்ட இடங்களிலுள்ள திறந்த வெளி நிலங்களை சென்னை மாநகராட்சியின் பராமரிப்புக்கு எடுத்துக்கொள்ள பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | மண்டலம் | வார்டு எண். | இடம் | கிராமம் | புல எண். | பரப்பளவு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 10 | 150 | சத்யதேவ் அவின்யூ | மைலாப்பூர் | 4288/89 பிளாக்.94 | 610 சதுர மீட்டர் |
| 2 | 10 | 150 | சத்யதேவ் அவின்யூ | மைலாப்பூர் | 4288/88 பிளாக் 94 | 784.37 சதுர மீட்டர் |
| 3 | 10 | 150 | சத்யதேவ் அவின்யூ | மைலாப்பூர் | 4288/94 பிளாக் 94 | 433.21 சதுர மீட்டர் |
| 4 | 10 | 150 | எம்.ஆர்.சி.நகர் விரிவு | மைலாப்பூர் | 4288/99 4288/100 பிளாக் 94 | 1047.74 சதுர மீட்டர் |
| 5 | 10 | 150 | எம்.ஆர்.சி.நகர் விரிவு | மைலாப்பூர் | 4288/8 பாகம் பிளாக் 94 | 269.42 சதுர மீட்டர் |
| 6 | 10 | 153 | சாந்தோம் லாசர்ஸ் சர்ச் சாலை மற்றும் 2வது டிரஸ்ட் சாலை சந்திப்பு | மைலாப்பூர் | 4462/2 பாகம் 4569/18 பாகம் 4463/2 4569/2 பாகம் 4464/2 | 1684 சதுர மீட்டர் |
| 7 | 10 | 153 | வேளச்சேரி பிரதான சாலை நெ.33 | வேளச்சேரி | 2, 4, மற்றும் 24 பிளாக் 68 | 1405 சதுர மீட்டர் |
| 8 | 10 | 153 | 7/27 ஒராண்டி அம்மன் கோயில் லேன் | வேளச்சேரி | 398/10, 398/3 பாகம் 396/3, 396/4 | 1160 சதுர மீட்டர் |

<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/2426/2005</u>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | 10 | 153 | 43/A வேளச்சேரி மெயின்ரோடு | வேளச்சேரி | 237/1 பிளாக் 23 | 121.72 சதுர மீட்டர் |
| 10 | 10 | 153 | அம்பிகா தெரு | வேளச்சேரி | 165/1A பாகம் | 935.39 சதுர மீட்டர் |
| 11 | 10 | 151 | சீனிவாச மூர்த்தி அவென்யூ | வேளச்சேரி | 13/3, 14/3, 27/1 | 283 சதுர மீட்டர் |
| 12 | 10 | 153ஏ | ஏரிக்கரை சாலை | வேளச்சேரி | 527/8 பாகம் | 836.43 சதுர மீட்டர் |
| 13 | 10 | 153ஏ | ஏரிக்கரை சாலை | வேளச்சேரி | 383 பாகம் 383/3 பாகம் | 181.09 சதுர மீட்டர் |
| 14 | 10 | 154 | தரமணி | தரமணி | 68 பாகம் பிளாக் 6 | 744.87 சதுர மீட்டர் |
| 15 | 10 | 154 | கானகம் | கானகம் | 9 பாகம் பிளாக் 9 | 730.13 சதுர மீட்டர் |
| 16 | 10 | 154 | திருவான்மியூர் | திருவான்மியூர் | 40/3 பிளாக் 20 | 246.45 சதுர மீட்டர் |
| 17 | 10 | 154 | திருவான்மியூர் | திருவான்மியூர் | 1 பாகம் பிளாக் 7 , | 2024 சதுர மீட்டர் |
| 18 | 10 | 154 | திருவான்மியூர் | திருவான்மியூர் | 27, பிளாக் 20 | 249.31 சதுர மீட்டர் |

ஏனவே மண்டலம்–10 வார்டுகுழு பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்காணும் 18 இடங்களிலுள்ள திறந்த வெளி நிலங்களை சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்திடமிருந்து எடுத்துக்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வவிமநி) மூலமாக சமர்பிக்கப்படுகிறது.

“23.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.68/2008 நாள்: 23.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. “

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/1199/2008</u>**
**<u>ஆணையரின் 21.05.2008 நாளிட்டக் குறிப்பு</u>**

**<u>19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :230/2008 பொருள் எண்.24

**<u>திறந்தவெளி நிலம் எடுத்தல்</u>**

மண்டலம்–9, வார்டு எண்.139ல், சர்தார் படேல் சாலை மற்றும் வேளச்சேரி சாலை சந்திப்பில் வெங்கடாபுரம் கிராமம், பிளாக் எண்.6, நகர அளவை எண்கள் 54/3 பாகம் 56 பாகம், 54/1 பாகம் மற்றும் 54/2 பாகத்திலுள்ள 12513 சதுர அடி பரப்பளவு கொண்ட திறந்த வெளி நிலத்தினை கட்டட வரைபட அனுமதி வழங்கும் போது அதன் உரிமையாளரிடமிருந்து தானப்பத்திரம் மூலமாக சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் எடுத்துக் கொண்டு சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் முன் வந்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி திறந்தவெளி நிலத்தினை வட்டாட்சியர், நிலம் மற்றும் உடைமைத்துறை மற்றும் வார்டு எண்.139ன் உதவி பொறியாளர் ஆகியோர்களால் 09.04.2008 அன்று கூட்டு புலத் தணிக்கை செய்யப்பட்டு, ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்ட திறந்த வெளி நிலத்தினை சென்னை மாநகராட்சி பராமரிப்புக்கு எடுத்துக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதியினை பெறுவதற்காக 9வது மண்டல வார்டுகுழு தனது தீர்மானம் எண்.94 நாள் 28.04.2008–ல் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, மண்டலம்–9, வார்டு எண்.139ல் சர்தார் பட்டேல் சாலை மற்றும் வேளச்சேரி சாலை சந்திப்பில் வெங்கடாபுரம் கிராமம், பிளாக் எண்.6 நகர அளவை எண்கள் 54/3 பாகம், 56 பாகம், 54/1 பாகம் மற்றும் 54/2 பாகத்திலுள்ள 12513 சதுர அடி பரப்பளவு கொண்ட திறந்த வெளி நிலத்தினை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து எடுத்துக் கொள்வதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.82/2008 நாள்: 23.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :231/2008 பொருள் எண்:25

**நிலஉரிமை மாற்றம்**

மண்டலம்–1, பகுதி–1, வார்டு–2ல் சென்னை – 81, எருக்கஞ்சேரி கிராமம், பிளாக் எண்.9, டி.எஸ்.எண்.4ல் ஜீ.என்.டி நெடுஞ்சாலையில் இந்தியன் வங்கிக்கு எதிரில் தமிழக அரசு வருவாய் துறைக்கு சொந்தமான 6300 மீட்டர் பரப்பளவுள்ள காலி நிலத்தில் கட்டிடத் துறையின் மூலம் தாய் சேய் நல விடுதியும், எருக்கஞ்சேரி கிராமம் பிளாக் எண்.7 டி.எஸ்.எண்.26ல் அண்ணாசாலை கிராம நிலத்தில் 8960 சதுர மீட்டர் பரப்பளவில் உள்ள தமிழக அரசு வருவாய் துறைக்கு சொந்தமான காலி நிலத்தினை சுற்று சுவர் கட்டுமான பணி மேற்கொண்டு இருபுறமும் படி அமைத்து வழி ஏற்படுத்தி மழைநீர் சேமிப்பதற்கு குளம் அமைக்கவும், இது குறித்து நிலம் மற்றும் உடைமைத்துறையின் மூலம் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கும்படி 7.12.2006 அன்று வணக்கத்திற்குறிய மேயர் அவர்கள் ஆய்வின் போது உத்தரவிட்டதின் அடிப்படையில் மேற்கண்ட கருத்தினை வார்டு குழு–1ல் பரிந்துரைத்து தீர்மான எண்.46/2006, நாள் 27.12.2006ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்கண்ட இவ்விரண்டு நிலங்களில் சென்னை மாநகராட்சி தாய் சேய் நல விடுதி கட்டுவதற்கும், மற்றும் மழைநீர் சேமிப்பதற்கு குளம் அமைக்கவும், மேற்படி நிலங்களை சென்னை மாநகராட்சிக்கு உரிமை மாற்றம் செய்யுமாறு இவ்வலுவலக கடிதங்கள் மூலம் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

28.01.2008 நாளிட்ட மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதத்தில் எருக்கஞ்சேரி கிராமம் புல எண்.4 பிளாக் 9ல் தாய் சேய் நல மருத்துவமனை கட்ட நில உரிமை மாற்றம் கோரும் கேட்புப் படிவம் 3 நகல்கள் மேல் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்குமாறு கேட்டு கொண்டபடி கேட்புப் படிவம் 3 நகல்கள் பார்வை–4ல் கண்டுள்ள இவ்வலுவலக கடிதத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து மன்றத்தின் பின்னேற்பு பெறுவதற்கும் மேற்கண்டவற்றின் அடிப்படையில் எருக்கஞ்சேரி கிராமம் பிளாக் எண்.7 டி.எஸ்.எண்.26ல் அண்ணாசாலை கிராம நிலத்தில் 8960 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள தமிழக அரசு வருவாய் துறைக்கு சொந்தமான நிலத்தினையும் சென்னை மாநகராட்சிக்கு மாற்றம் செய்வதற்கு புலத் தணிக்கை மேற்கொண்டு கேட்புப் படிவம் அனுப்புவதற்கும். நிலைக்குழு (வ.வி.மநி) மூலமாக மன்றத்தின் அனுமதி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.70/2008 நாள்: 23.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :232/2008 பொருள் எண்.26

**நில மாற்றம்**

மேலாண்மை இயக்குநர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் அவர்களின் 22.11.2007 நாளிட்ட கடிதத்தில், அண்ணா பூங்கா குடிநீர் பங்கீடு நிலையத்தில் 2. 8 ML கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டியும், நீரேற்று நிலையமும் (OHT & Pump House) கட்ட திட்டமிடப்பட்டுள்ளதாகவும் , அண்ணா பூங்கா நர்சரியில் காலியாக உள்ள நிலத்தில் இவைகளை அமைத்து தடங்கலில்லாமல் குடிநீர் வழங்குவதற்கு 3960 சதுர மீட்டர் (72மீ x 55மீ) காலி இடம் மேற்படி திட்டப்பணிகளுக்கு தேவையாக உள்ளது என்றும் தெரிவித்து பணிகளை மேற்கொள்ள முன்நுழைவு அனுமதி (Enter upon Permission) அளிக்குமாறு கோரியுள்ளார்.

மண்டலம்–2, வார்டு 22ல் உள்ள அண்ணா பூங்கா, தண்டையார்பேட்டை கிராமத்தில், பிளாக் எண்.3ல் ஆர்.எஸ்.எண்.42/1ல் அமைந்துள்ளது. இவ்வலுவலக ஆவணங்களின்படி இந்நிலம் மாநகராட்சி–பொது (Corporation Public) என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அரசாணை எண்.1963, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத் துறை, நாள் 30.12.1982ல் வெளியிடப்பட்ட பட்டியலின்படி அண்ணாபூங்கா தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளிகள் (பாதுகாப்பு மற்றும் ஒழுங்கு முறைகள்) பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள், அரசின் முன் அனுமதியின்றி, அறிவிக்கை செய்யப்பட்ட நோக்கத்தைத் தவிர இதர நோக்கத்திற்காக பயன்படுத்தக்கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்–2 வார்டு குழு தன் 29/03.12.2007 எண்ணிட்ட தீர்மானத்தில், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய துறையினரால் அண்ணா பூங்காவில் மேற்கொள்ளப்படும் தண்ணீர் உயர்நிலை தொட்டி மற்றும் குடிநீர் வழங்கல் நிலையம் அமைக்கும் பணிக்கு இடஒதுக்கீடு செய்ய பரிந்துரை செய்துள்ளது.

ஏனவே, குடிநீர் வழங்கல் வாரிய மேலாண்மை இயக்குநரின் கோரிக்கைக்கு இணங்க,

i) மேற்படி பூங்காவாக வகைப்படுத்தப்பட்ட நிலத்தை, பூங்கா இனத்திலிருந்து விலக்கு அளிக்க அரசினை கோருவதற்கும், பின் நிலத்தை குடிநீர் வழங்கல் வாரியத்திற்கு வழங்குவது குறித்தும்

ii) மேற்படி நிலத்தில் பணிகளை தொடர சென்னை மாநகராட்சியின் தடையின்மையினை அளிப்பது குறித்தும், நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.83/2008 நாள்: 23.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. “

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ7/2382/2006**
**ஆணையாளரின் 12.05.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :233/2008 பொருள் எண்:27

**வணிக வளாகம்**

மண்டலம்–6 முதல் 10 வரையிலான காலி கடைகளுக்கு 31.07.2006 அன்று நடைபெற்ற ஏலத்திற்கு 36 காலி கடைகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டதில் 8 காலி கடைகளுக்கு 9 நபர்கள் ஆஜராகியிருந்தனர். அவர்களில் 5 நபர்கள் மாநகராட்சி நிர்ணயித்த சதுர அடி விலையை விட அதிகம் கோரியிருந்தனர். எனவே அவர்களிடமிருந்து EMD மற்றும் 25 சதவிதம் வாடகை முன்பணம் வசூல் செய்யயப்பட்டு கருவூலத்தில் செலுத்தப்பட்டது. மேலும் 75 சதவிதம் முன்பணம் மற்றும் ஒப்பந்த ஆவணத்தை அளிக்க கோருவதற்கு முந்தைய ஆணையரால் அனுமதி அளிக்கப்பட்டது, ஏலம் கோரிய நபர்களின் விவரம் பின்வருமாறு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| வரிசை எண். | வணிக வளாக பெயர் | கடை எண்./ தளம் | பரப்பளவு | மாநகராட்சி நிர்ணயித்த விவரம் சதுர அடிக்கு ரூ. | அதிகம் கோரிய சதுர அடிக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | காமராஜர் சாலை சுரங்க பாதை, எம்.ஏ இக்பால் | 08/ கீழ் தளம் | 29 சதுர அடி | 20/– | 31/– |
| 2 | காமராஜர் சாலை சுரங்க பாதை, கே.ஜி.மாணிக்க வாசகம் | 27/கீழ் தளம் | 19 சதுர அடி | 20/– | 31/– |
| 3 | காமராஜர் சாலை சுரங்க பாதை, வி.ஜெயந்தி | 02/கீழ் தளம் | 29 சதுர அடி | 20/– | 31/– |
| 4 | சி.பா.ஆதித்தனார் சாலை எம்.மரியம்பீவி | 06/தரை தளம் | 150 சதுர அடி | 10/– | 14/– |
| 5 | சி.பா.ஆதித்தனார் சாலை சி.ஆர்ஜீன் | 08/முதல் தளம் | 95 சதுர அடி | 10/– | 13/– |

எனவே, மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள விவரங்களின் அடிப்படையில் மாநகராட்சி நிர்ணயம் செய்த தொகையான சதுர அடி ரூ.10/ஐ காட்டிலும் அதிகப்படியாக சதுர அடி விலை கோரிய ஏலதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யும் பொருட்டு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "23.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.84/2008 நாள்: 23.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ2/18101/2008.**
**ஆணையரின் 21.05.2008 தேதியிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :234/2008 பொருள் எண்.28

**பணியமைப்பு – வயது முதிர்வு ஓய்வு**

சென்னை மாநகராட்சி வருவாய்த்துறையில் வருவாய் அலுவலராக பணிபுரியும் திரு.எம். நாமதேவ் என்பவர் வயது முதிர்வு அடிப்படையில் 31.05.2008 அன்று ஓய்வு பெறவுள்ளார்.

இவர் வகித்து வரும் வருவாய் அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–1ஏ என்று வகைப்படுத்தப்பட்டுள்ளதால், சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 பிரிவு 85(3)(ஏ)ன்படி, இவரை வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற அரசாணை பெற வேண்டும்.

தனியரது பணி விவரங்கள் பின்வருமாறு :–

| தனியர் வகித்து வந்த பதவியின் பெயர் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரண்முறைப்படுத்தப்பட்ட நாள் |
|---|---|---|
| உதவியாளர் | 07.02.1973 | 07.02.1973 |
| உரிமம் ஆய்வாளர் | 29.11.1985 பி.ப. | 30.11.1985 |
| வரிமதிப்பீட்டாளர் | 17.04.1993 | 17.04.1993 |
| உதவி வருவாய் அலுவலர் | 10.12.2003 | 10.12.2003 |
| கூடுதல் வருவாய் அலுவலர் | 11.07.2007 | 11.07.2007 |

அரசாணை எண்.2(ப) 62, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை, நாள் 29.04.2008ன்படி கூடுதல் வருவாய் அலுவலர் திரு.எம். நாமதேவ் என்பவர் திரு.கே. ஜோதிராம், வருவாய் அலுவலர் அவர்கள் ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட காலிப்பணியிடத்தில் ரூ.12000–375–16500 என்ற ஊதிய விகிதத்தில் வருவாய் அலுவலராக பதவி உயர்வு அளிக்கப்பட்டது. (செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ2/16550/2007, நாள் 02.05.2008). இவர் வருவாய் அலுவலர் பதவியில் 03.05.2008 அன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

தனியர் மீது விழப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று அறிக்கை பெறப்பட்டுள்ளது. மேலும், துறை பூர்வமான ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்தில் இவர் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஏதும் இல்லை என்று அறிக்கை பெறப்பட்டுள்ளது.

தனியர் பணிபுரிந்த துறை / மண்டலங்களில் இவர் மீது தணிக்கை தடைகள் ஏதும் நிலுவையில் இல்லை என்று அறிக்கை பெறப்பட்டுள்ளது. எனினும், தனியர் மீது பின்வரும் காலங்களில் தணிக்கை தடைகள் இருப்பதை சுட்டிகாட்டி உள்ளாட்சி நிதி தணிக்கையினரால் அறிக்கை பெறப்படும் பட்சத்தில் மற்றும் நீண்ட கால முன்பணம் மற்றும் அலுவலக முன்பணம் தீர்வு செய்யப்படாமல் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு இவரை பொறுப்பாக்கி இவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்று நிபந்தனைக்குட்படுத்தி தனியரை 31.05.2008 அன்று வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற அனுமதிக்கலாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

மேற்படி நிபந்தனைகளுக்குட்படுத்தி வருவாய் அலுவலராக பணிபுரியும் திரு.எம். நாமதேவ் என்பவரை 31.05.2008 அன்று வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற அரசாணை பெற வேண்டியுள்ளதால் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு 15.05.2008 தேதியிட்டு அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**வ.து.ந.க.எண்.அ2/ 000121/2008**
**ஆணையரின் 21.5.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :235/2008 பொருள் எண்: 29

**பணியமைப்பு – வயது முதிர்வு ஓய்வு**

திரு. ஆர். தண்டபாணி, உதவி வருவாய் அலுவலர் அவர்கள் வயது முதிர்வு காரணமாக 31.05.2008ல் ஓய்வு பெற உள்ளார். இவர் 23.5.73 ல் தட்டச்சராக சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்தார். இவருக்கு இப்பதவியில் 23.5.73 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு 29.6.76 முதல் தகுதிகாண் பருவ உரிமை வழங்கப்பட்டுள்ளது. பின்னர் 13.11.79 ல் உதவி பண்டக காப்பாளராகவும், 10.9.80ல் உதவியாளராகவும் 2.12.95ல் உரிமம் ஆய்வாளராகவும், 7.6.97ல் வரிமதிப்பீட்டாளராகவும் 13.12.2007 முதல் உதவி வருவாய் அலுவலராகவும் பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வருகிறார். இவரது பணிகள் உதவி பண்டக காப்பாளர் பதவியில் 13.11.79 முதலும், உதவியாளர் பதவியில் 10.9.80முதலும், உரிமம் ஆய்வாளர் பதவியில் 2.12.95 முதலும், வரிமதிப்பீட்டாளர் பதவியில் 7.6.97 முதலும் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. உதவி வருவாய் அலுவலர் பதவியில் அரசின் உறுதியாக்கம் பெறப்பட்டு பணி வரன்முறைபடுத்துவதற்காக தனியே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவர் பணிபுரிந்த மண்டலங்களிலிருந்து தனியர் மீது தணிக்கைத்தடை ஏதும் நிலுவையில் இல்லையென சான்று பெறப்பட்டுள்ளது. விழிப்பு அலுவலர் அவர்களும் தனியர் மீது யாதொரு விசாரணையும் நிலுவையில் இல்லையென அறிக்கை அளித்துள்ளார். துறைப்பூர்வமான ஒழுங்கு நடவடிக்கையும் ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான குடியிருப்பு ஏதும் இவருக்கு ஒதுக்கப்படவில்லை. சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்திற்கு இவர் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ஏதுமில்லை எனவும் சான்று பெறப்பட்டுள்ளது. இருப்பினும் தணிக்கைத் தடை இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி நிதி சம்மந்தப்பட்ட தணிக்கைத் தடைகளால் நிதி இழப்பு மற்றும் நீண்ட கால முன் பணம் சரி செய்யப்படாமல் இருப்பது ஆகியவை பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அதனை ஓய்வூதியப் பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்படுத்தி தனியரை 31.5.2008 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வில் செல்ல அனுமதி வழங்கலாம் என பரிந்துரைக்கப்படுகிறது. தனியர் வகுப்பு–2 ஐச் சார்ந்த அலுவலராதலால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே இவரை பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்க இயலும்.

எனவே,மேற்படி நிபந்தனைகளுக்குட்படுத்தி திரு. ஆர். தண்டபாணி, உதவி வருவாய் அலுவலர் என்பவரை 31.05.2008 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி வழங்க நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘தனியர் ஏற்கனவே 31.05.2008 அன்று ஆணையரின் ஆணைப்படி ஓய்வுபெற்ற நிலையில் இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: வ.து..
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

வ.து.ந.க.எண்.அ2/ 000161/2008
ஆணையரின் 21.5.2008 நாளிட்ட குறிப்பு

## 19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :236/2008 பொருள் எண் 30

பணியமைப்பு – வயது முதிர்வு ஓய்வு

திரு. எம்.முகமது உதுமான், உதவி வருவாய் அலுவலர் அவர்கள் வயது முதிர்வு காரணமாக 31.05.2008ல் ஓய்வு பெற உள்ளார். இவர் 10.5.76ல் வாடகை வசூலிப்பவராக சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்தார். இவருக்கு இப்பதவியில் 10.5.76 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு 6.6.78 முதல் தகுதிகாண் பருவ உரிமை வழங்கப்பட்டுள்ளது. பின்னர் 9.1.97ல் உரிமம் ஆய்வாளராகவும்,24.8.2000ல் வரிமதிப்பீட்டாளராகவும் 12.12.2001 முதல் உதவி வருவாய் அலுவலராகவும் பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வருகிறார். இவரது பணிகள் உரிமம் ஆய்வாளர் பதவியில் 9.1.97 முதலும்,வரிமதிப்பீட்டாளர் பதவியில் 24.8.2000 முதலும் பணி வரன்முறை செய்யப்பட்டுள்ளது. உதவி வருவாய் அலுவலர் பதவியில் அரசின் உறுதியாக்கம் பெறப்பட்டு பணி வரன்முறைபடுத்துவதற்காக தனியே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவர் பணிபுரிந்த மண்டலங்களிலிருந்து தனியர் மீது தணிக்கைத்தடை ஏதும் நிலுவையில் இல்லையென சான்று பெறப்பட்டுள்ளது. விழிப்பு அலுவலர் அவர்களும் தனியர் மீது யாதொரு விசாரணையும் நிலுவையில் இல்லையென அறிக்கை அளித்துள்ளார். துறைப்பூர்வமான ஒழுங்கு நடவடிக்கையும் ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான குடியிருப்பு ஏதும் இவருக்கு ஒதுக்கப்படவில்லை. சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்திற்கு இவர் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ஏதுமில்லை எனவும் சான்று பெறப்பட்டுள்ளது. இருப்பினும் தணிக்கைத் தடை இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி நிதி சம்மந்தப்பட்ட தணிக்கைத் தடைகளால் நிதி இழப்பு மற்றும் நீண்ட கால முன் பணம் சரி செய்யப்படாமல் இருப்பது ஆகியவை பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அதனை ஓய்வூதியப் பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்படுத்தி தனியரை 31.5.2008 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வில் செல்ல அனுமதி வழங்கலாம் என பரிந்துரைக்கப்படுகிறது. தனியர் வகுப்பு–2 ஐச் சார்ந்த அலுவலராதலால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே இவரை பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்க இயலும்.

எனவே,மேற்படி நிபந்தனைகளுக்குட்படுத்தி திரு. எம். முகமது உதுமான், உதவி வருவாய் அலுவலர் என்பவரை 31.05.2008 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி வழங்க நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"தனியர் ஏற்கனவே 31.05.2008 அன்று ஆணையரின் ஆணைப்படி ஓய்வுபெற்ற நிலையில் இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: வ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி13/6692/2008**
**ஆணையாளர் அவர்களின் 08.05.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :237/2008 பொருள் எண். 31

**ஓய்வூதியம்**

டாக்டர்.ஜி.சுதாகர், மருத்துவ அலுவலர், சுகாதார துறை அவர்கள் வயது முதிர்வு ஓய்வு காரணமாகக பணியிலிருந்து 31.12.1992 முதல் ஓய்வு பெற்றார். தனியர் 27 வருடங்கள் 10 மாதங்கள் 06 நாட்கள் தகுதிப் பணி புரிந்தமையால், சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணை, பொ.து.ந.க.எண்.பி13/1903/93, நாள்.05.05.1993ன்படி ஓய்வூதியமாக மாதம் ரூ.1645/– மற்றும் பணிக்கொடைத் தொகை ரூ.55,370/– மற்றும் தொகுப்புத் தொகை ரூ.68,785/– வழங்கப்பட்டுள்ளது. துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.4726/எ4/2007, நாள்.21.02.2008 சான்றின்படி தனியருக்கு அனுமதிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதிய பயன்கள் விவரம் பின்வருமாறு:–

| | ஓய்வூதிய பயன் |
|---|---|
| ஓய்வூதியம் 01.01.1993 முதல் மாதம் | ரூ.1678/– |
| பணிக்கொடை | ரூ.55,314/– |
| மாதத்தொகுப்புத் தொகை | ரூ.559/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.1,119/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.70,166/– |
| குடும்ப ஓய்வூதியம்<br>(மனைவி திருமதி.குசுமா சுதாகர்) | ரூ.1186/– |

இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, டாக்டர்.ஜி.சுதாகர், 31.12.1992 பி.ப. முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்ற மருத்துவ அலுவலர், சுகாதார துறை அவர்களுக்கு, தணிக்கை சான்றின்படி ஓய்வூதிய பயன்களாக ஏற்கனவே வழங்கப்பட்ட ஓய்வூதியமான ரூ.1645/–லிருந்து அதிகரித்து ஓய்வூதியம் ரூ.1678/–ஆக வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.55,314/– (ரூபாய் ஐம்பத்தி ஐந்தாயிரத்து முன்னூற்று பதினான்கு மட்டும்) தனியருக்கு பணிக்கொடையாக ஏற்கனவே ரூ.55,370/– வழங்கப்பட்டதால் மிகையாக வழங்கப்பட்ட ரூ.56/– மற்றும் மிகையாக வழங்கப்பட்ட ஊதியம் ரூ.3889/– ஆக மொத்தம் ரூ.3945/– ஓய்வூதிய நிலுவைத் தொகையில் பிடித்தம் செய்யவும், மற்றும் அனுமதிக்கப்படும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.559/– தொகுத்துப்பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.70,166/– (ரூபாய் எழுபதாயிரத்து நூற்று அறுபத்தி ஆறு மட்டும்) ஏற்கனவே வழங்கப்பட்ட தொகுப்புத் தொகை ரூ.68,785/– சரிசெய்து மீதத் தொகை ரூ.1,381/– (ரூபாய் ஓராயிரத்து முன்னூற்று எண்பத்தி ஒன்று மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அன்னாருக்கு ஓய்வூதியம் ரூ.1678/–லிருந்து ரூ.1119/–ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி.குசுமா சுதாகர் அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக ரூ.1186/– வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.பி13/7768/2008
ஆணையாளர் அவர்களின் 09.05.2008 நாளிட்ட குறிப்பு

19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :238/2008 பொருள் எண்.32

## ஓய்வூதியம்

சென்னை மாநகராட்சி, சுகாதாரத் துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து 31–05–2007 பி.ப. அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்ற திருமதி. காந்திமதி, என்பவருக்கு கீழ்கண்டவாறு ஓய்வூதியப் பயன்களை வழங்க உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் கடிதம் எண்.2169 / எ4/ 2007, நாள்25–6–2007 சான்று வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஓய்வூதியம் 01–06–2007 முதல் மாதம் | ரூ. 7454/– |
| இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை | ரூ. 2,87,460/– |
| மாதத் தொகுப்புத் தொகை | ரூ. 2484/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ. 4970/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ. 3,11,792/– |
| ஓய்வூதியரின் காலத்திற்குப் பின்னர் அன்னாரது கணவர் திரு.பி. ஜெயகுமார், என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் மாதம் | ரூ. 7454/– 11–05–.2014 வரை<br>ரூ. 5963/–12–05–2014 முதல் |

இவர் 22 ஆண்டுகள் 03 மாதங்கள் 14 நாட்க ள் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்துள்ளார். மேற்படி அலுவலரிடமிருந்து கீழ்கண்ட தொகைகள் பிடித்தம் செய்யப்பட வேண்டியுள்ளது

| | |
|---|---|
| 25 விழுக்காடு இறப்பு மற்றும் பணிக்கொடைத் தொகையிலிருந்து தணிகைத் தடைகள் நிவர்த்திக்காக | ரூ. 71,865/– |
| மிகை ஊதியம் | ரூ. 896/– |

மேற்படி தனியரின் இறப்பு மற்றும் பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகை அன்னாரின் மீதான தணிக்கைத்தடைகள் தீர்வு செய்யப்பட்ட பின்பு மீள வழங்கப்படும்.

இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்படவேண்டும்

எனவே, மேற்படி தொகைகளை பிடித்தம் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் சான்றின்படி ஓய்வூதியப் பயன்களை அளிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.பி4/7711/08
ஆணையாளர் அவர்களின் 06.05.2008 நாளிட்ட குறிப்பு

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :239/2008 பொருள் எண். 33

**ஓய்வூதியம்**

திரு.பி.போரூரான், உதவி கோட்ட பொறியாளர், அவர்கள் கடந்த 30.06.2003 பி.ப.முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.753/எ4/2007, நாள்.17.03.2008ல் தனியருக்கு அனுமதிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதியம் பயன்களின் விவரம் பின்வருமாறு.

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.5015/– 01.07.2003 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ.4560/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.2,09,744/– ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.1,90,791/– ஐ நேர் செய்து மீதம் தொகையான ரூ.18,953/–ஐ வழங்கவும் ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி.அம்பிகா, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.5015/– 30.06.2010 வரையிலும் வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

29 வருடங்கள் 06 மாதங்கள் 15 நாட்கள் தகுதிப்பணிக்காலம் புரிந்த அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மன்றத்தின் ஒப்புதல் பெற்றப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 17.03.2008 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி 01.07.2003 முதல் தனியருக்கு மேற்கண்டவாறு திருத்திய ஓய்வூதியப் பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி9/7391/2008**
**ஆணையாளர் அவர்களின் 14.05.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :240/2008 பொருள் எண்.34

**ஓய்வூதியம்**

திரு.கே.மாதவன், உதவி பொறியாளர், மண்டலம்–1, அவர்கள் கடந்த 30.09.1989 முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். அன்னாருக்கு உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை 12.12.1989 நாளிட்ட கடிதத்தின்படி தனியருக்கு ஓய்வூதியமாக 01.10.1989 முதல் ரூ.955/– ஓய்வூதியமாகவும், பணிக்கொடைத் தொகையாக ரூ.32036/–மும், தொகுப்புத் தொகையாக ரூ.39916/–ம் தீர்வு செய்யப்பட்டது. பின்னர் 17.09.1990 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி 01.10.1989 முதல் ரூ.989/– ஓய்வூதியமாகவும், பணிக்கொடை தொகை ஏற்கனவே வழங்கப்பட்ட ரூ.32036/–யிலிருந்து ரூ.33251/– ஆக அதிகரித்து வழங்கப்பட்டது. தொகுப்புத் தொகையில் ஏதும் மாற்றமில்லை. அதன் பின்னர் தற்போது 10.03.2008 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி தனியருக்கு உதவிசெயற் பொறியாளர் பதவியில் திருத்தப்பட்ட ஓய்வூதியப் பயன்கள் கடித எண்.நி.மு.எண்.439/எ4/2008ன்படி அளிக்க சான்றளிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

வயது முதிர்வு ஓய்வூதியம் ஏற்கனவே வழங்கப்பட்ட தொகை ரூ.989/–லிருந்து ரூ.1087/– ஆக அதிகரித்து 01.10.1989 முதல் வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுக்காலப் பணிக்கொடை ரூ.36856/–ல் ஏற்கனவே அனுமதித்த தொகை ரூ.33251/– போக மீதத் தொகை ரூ.2605/– வழங்கவும், ஓய்வூதியத்தில் ரூ.362/–ஐ தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் தொகை ரூ.45438/– வழங்கவும், அதில் ஏற்கனவே வழங்கப்பட்ட தொகுப்புத்தொகைரூ.39916/– நேர் செய்து மீதம் ரூ.5522/– வழங்கவும், அவ்வாறு தொகுத்துப் பெறுவதால் குறைக்கப்பட்ட ஓய்வூதியம் 01.10.1989 முதல் 30.09.2004 முடியவும், 01.10.2004 முதல் தொகுக்கப்பட்ட தொகையினை மீள வழங்கவும், குறைக்கப்பட்ட வித்தியாச ஓய்வூதியத்தை அன்னாருக்கு 01.10.1989 முதல் ஓய்வூதிய நிலுவைத் தொகை வழங்கும்போது பிடித்தம் செய்யவும், தொகுப்பு பெறுவதால் தனியரது ஓய்வூதியம் ரூ.1087/–லிருந்து ரூ.725/– ஆக குறைத்து வழங்கவும், மேலும் தனியரது காலத்திற்குபின் குடும்ப ஓய்வூதியமாக அன்னாரது வாரிசுதாரரும், மனைவியுமான திருமதி. முனியம்மாள், அவர்களுக்கு மாதம் ரூ.797/– 30% வழங்கவும் சான்றளிக்கப்பட்டுள்ளது.

தனியர் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, தனியருக்கு மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்4/0099/2007
ஆணையாளர் அவர்களின் 06.05.2008 நாளிட்ட குறிப்பு

19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :241/2008 பொருள் எண்.35

தேர்வு நிலை வழங்க அனுமதி

மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர். திருமதி. டி.ஆர்.அபிராமி, மருத்துவ அலுவலர் அவர்கள் பத்தாண்டு பணியை முடித்துள்ளார். அவருக்கு தேர்வு நிலை கால சம்பள ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டும்.

டாக்டர். திருமதி. டி.ஆர்.அபிராமி, மருத்துவ அலுவலராக 08.02.1996 அன்று பணியமர்த்தப்பட்டார். இவரது பணி நியமனம் அரசாணை எண்.474 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மாந–3) நாள்.26.09.2001ன்படி உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. மாமன்ற தீர்மான எண்.372, 31.08.2006ன்படி மருத்துவ அலுவலர் பதவியில் 08.02.1998 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிக்கப்பட்டுள்ளது. தனியர் துறைத்தேர்வு அனைத்தும் தேர்ச்சி பெற்றுள்ளார்கள்.

கணக்கு அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை அவர்கள் தனியருக்கு 08.02.2006 முதல் தேர்வு நிலை கால சம்பள விகிதம் அனுமதித்து அவரது அடிப்படை ஊதியத்தை ரூ. 11025+225 சிறப்பு ஊதியம் என தேர்வு நிலை கால சம்பளம் 9100–275–14050ல் நிர்ணயிக்கலாம் என குறிப்புரை வழங்கியுள்ளார்.

தனியர் மீது துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை. இவரது பணிக்காலத்தை பற்றிய விவரங்கள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் 01 | மருத்துவ அலுவலரின் பெயர் 02 | முதன் முதலில் நியமன நாள் / பணிவரன் முறை செய்த நாள் 03 | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் 04 | சம்பளம் இல்லா விடுப்பு துய்த்த நாள் 05 | பத்தாண்டு பணியை முடித்த நாள் 06 |
|---|---|---|---|---|---|
| 01. | டாக்டர். திருமதி. டி.ஆர்.அபிராமி | 08.02.1996 | 07.02.1998 | இல்லை | 07.02.2006 |

| முந்தைய ஆண்டுகளில் தண்டனை வழங்கப்பட்ட விவரம் 07 | தண்டனை முற்று பெற்ற நாள் 08 | தேர்வு நிலை ஊதியம் பெற தகுதியுடயவரா 09 | தேர்வு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் 10 |
|---|---|---|---|
| ஏதுமில்லை | – – – | ஆம் | 08.02.2006 |

தனியருக்கு தேர்வு நிலை கால சம்பளம் வழங்குவதால் மருத்துவ அலுவலர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

எனவே, டாக்டர். திருமதி. டி.ஆர்.அபிராமி, மருத்துவ அலுவலர் பதவியில் 10 ஆண்டு பணியை 07.02.2006 அன்று பூர்த்தி செய்ததால் அவருக்கு 08.02.2006 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 11025+225 சிறப்பு ஊதியம் என தேர்வு நிலை காலமுறை சம்பளமாக ரூ. 9100–275–14050ல் நிர்ணயிக்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்4/0102/2007
ஆணையாளர் அவர்களின் 28.04.2008 நாளிட்ட குறிப்பு

19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :242/2008 பொருள் எண்.36

தேர்வு நிலை வழங்க அனுமதி

மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர். திருமதி. வி.விஜயசாமூண்டீஸ்வரி, மருத்துவ அலுவலர் அவர்கள் பத்தாண்டு பணியை முடித்துள்ளார். அவருக்கு தேர்வு நிலை கால சம்பள ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டும்.

டாக்டர். திருமதி. வி.விஜயசாமூண்டீஸ்வரி, மருத்துவ அலுவலராக 31.08.1996 அன்று பணியமர்த்தப்பட்டார். இவரது பணி நியமனம் அரசாணை எண்.474 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மாந–3) நாள்.26.09.2001ன்படி 31.08.1996 முதல் உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. மாமன்ற தீர்மான எண்.372, 31.08.2006ன்படி மருத்துவ அலுவலர் பதவியில் 31.08.1998 நாள் முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிக்கப்பட்டுள்ளது. தனியர் துறைத்தேர்வு அனைத்தும் தேர்ச்சி பெற்றுள்ளார்.

கணக்கு அலுவலர், இந்திய மக்கள் தொகைத்திட்டம் அவர்கள் தனியருக்கு 31.08.2006 முதல் தேர்வு நிலை கால சம்பள விகிதம் அனுமதித்து அவரது அடிப்படை ஊதியத்தை ரூ. 11025+225 சிறப்பு ஊதியம் என தேர்வு நிலை கால சம்பளம் 9100–275–14050ல் நிர்ணயிக்கலாம் என குறிப்புரை வழங்கியுள்ளார்.

தனியர் மீது துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை. இவரது பணிக்காலத்தை பற்றிய விவரங்கள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் 01 | மருத்துவ அலுவலரின் பெயர் 02 | முதன் முதலில் நியமன நாள் / பணிவரன் முறை செய்த நாள் 03 | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் 04 | சம்பளம் இல்லா விடுப்பு துய்த்த நாள் 05 | பத்தாண்டு பணியை முடித்த நாள் 06 |
|---|---|---|---|---|---|
| 01. | டாக்டர். திருமதி. வி.விஜயசாமூண்டீஸ்வரி, | 31.08.1996 | 30.08.1998 | இல்லை | 30.08.2006 |

| முந்தைய ஆண்டுகளில் தண்டனை வழங்கப்பட்ட விவரம் 07 | தண்டனை முற்று பெற்ற நாள் 08 | தேர்வு நிலை ஊதியம் பெற தகுதியுடயவரா 09 | தேர்வு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் 10 |
|---|---|---|---|
| ஏதுமில்லை | – – – | ஆம் | 31.08.2006 |

தனியருக்கு தேர்வு நிலை கால சம்பளம் வழங்குவதால் மருத்துவ அலுவலர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

எனவே, டாக்டர். திருமதி. வி.விஜயசாமூண்டீஸ்வரி, மருத்துவ அலுவலர் பதவியில் 10 ஆண்டு பணியை 30.08.2006 அன்று பூர்த்தி செய்ததால் அவருக்கு 31.08.2006 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 11025+225 சிறப்பு ஊதியம் என காலமுறை சம்பளமாக ரூ. 9100–275–14050ல் நிர்ணயிக்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்4/0103/2008
ஆணையாளர் அவர்களின் 28.04.2008 நாளிட்ட குறிப்பு

## 19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :243/2008 பொருள் எண்.37

### தேர்வு நிலை வழங்க அனுமதி

மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர். திருமதி. ஜி.ஆர்.தேன்மொழி, மருத்துவ அலுவலர் அவர்கள் பத்தாண்டு பணியை முடித்துள்ளார். அவருக்கு தேர்வு நிலை கால சம்பள ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டும்.

டாக்டர். திருமதி. ஜி.ஆர்.தேன்மொழி, மருத்துவ அலுவலராக 11.02.1996 அன்று பணியமர்த்தப்பட்டார். இவரது பணி நியமனம் அரசாணை எண்.474 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மாந–3) நாள்.26.08.2001ன்படி உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. மன்ற தீர்மான எண்.372/2006, 31.08.2006ன்படி மருத்துவ அலுவலர் பதவியில் 28.02.1998 நாள் முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. தனியர் துறைத்தேர்வு அனைத்தும் தேர்ச்சி பெற்றுள்ளார்.

கணக்கு அலுவலர், இந்திய மக்கள் தொகைத்திட்டம் அவர்கள் தனியருக்கு 03.03.2006 முதல் தேர்வு நிலை கால சம்பள விகிதம் அனுமதித்து அவரது அடிப்படை ஊதியத்தை ரூ. 11025+225 சிறப்பு ஊதியம் என தேர்வு நிலை கால சம்பளம் 9100–275–14050ல் நிர்ணயிக்கலாம் என குறிப்புரை வழங்கியுள்ளார்.

தனியர் மீது துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை. இவரது பணிக்காலத்தை பற்றிய விவரங்கள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மருத்துவ அலுவலரின் பெயர் | முதன் முதலில் நியமன நாள் / பணிவரன் முறை செய்த நாள் | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் | சம்பளம் இல்லா விடுப்பு துய்த்த நாள் | பத்தாண்டு பணியை முடித்த நாள் |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 |
| 01. | டாக்டர். திருமதி. ஜி.ஆர்.தேன்மொழி, | 11.02.1996 | 28.02.1998 | 20 நாட்கள் | 02.03.2006 |

| முந்தைய ஆண்டுகளில் தண்டனை வழங்கப்பட்ட விவரம் | தண்டனை முற்று பெற்ற நாள் | தேர்வு நிலை ஊதியம் பெற தகுதியுடயவரா | தேர்வு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|
| 07 | 08 | 09 | 10 |
| ஏதுமில்லை | – – – | ஆம் | 03.03.2006 |

தனியருக்கு தேர்வு நிலை கால சம்பளம் வழங்குவதால் மருத்துவ அலுவலர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

எனவே, டாக்டர். திருமதி. ஜி.ஆர்.தேன்மொழி, மருத்துவ அலுவலர் பதவியில் 10 ஆண்டு பணியை 02.03.2006 அன்று பூர்த்தி செய்ததால் அவருக்கு 03.03.2006 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 11025+225 சிறப்பு ஊதியம் என தேர்வு நிலை சம்பளமாக ரூ. 9100–275–14050ல் நிர்ணயிக்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :244/2008 பொருள் எண்.38

**சிறப்பு நிலை வழங்க அனுமதி**

மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர். திருமதி. ஷீலா கோபிநாத், மருத்துவ அலுவலர் அவர்கள் இருபதாண்டு பணியை முடித்துள்ளார். அவருக்கு சிறப்பு நிலை கால சம்பள ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டும்.

டாக்டர். திருமதி. ஷீலா கோபிநாத், மருத்துவ அலுவலராக 23.05.86அன்று பணியமர்த்தப்பட்டார். இவரது பணி நியமனம் அரசாணை எண்.1279 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள். 25.09.1991ன்படி உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. 23.05.1986 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு 23.05.1988 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. தனியர் துறைத்தேர்வு அனைத்தும் தேர்ச்சி பெற்றுள்ளார்கள்.

கணக்கு அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை அவர்கள் தனியருக்கு 23.05.2006 முதல் சிறப்பு நிலை கால சம்பள விகிதம் அனுமதித்து அவரது அடிப்படை ஊதியத்தை ரூ. 11950+175 தனிஊதியம் + 300 சிறப்பு ஊதியம் என சிறப்பு நிலை கால சம்பளம் 10000–325–15200ல் நிர்ணயிக்கலாம் என குறிப்புரை வழங்கியுள்ளார்.

தனியர் மீது துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை. இவரது பணிக்காலத்தை பற்றிய விவரங்கள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் 01 | மருத்துவ அலுவலரின் பெயர் 02 | முதன் முதலில் நியமன நாள் / பணிவரன் முறை செய்த நாள் 03 | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் 04 | சம்பளம் இல்லா விடுப்பு துய்த்த நாள் 05 | இருபதாண்டு பணியை முடித்த நாள் 06 |
|---|---|---|---|---|---|
| 01. | டாக்டர். திருமதி. ஷீலா கோபிநாத், | 23.05.1986 | 23.05.1988 | இல்லை | 22.05.2006 |

| முந்தைய ஆண்டுகளில் தண்டனை வழங்கப்ட்ட விவரம் 07 | தண்டனை முற்று பெற்ற நாள் 08 | சிறப்பு நிலை ஊதியம் பெற தகுதியுடயவரா 09 | சிறப்பு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் 10 |
|---|---|---|---|
| ஏதுமில்லை | – – – | ஆம் | 23.05.2006 |

தனியருக்கு தேர்வு நிலை கால சம்பளம் வழங்குவதால் மருத்துவ அலுவலர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

எனவே, டாக்டர். திருமதி. ஷீலா கோபிநாத், மருத்துவ அலுவலர் பதவியில் 20 ஆண்டு பணியை 22.05.2006 அன்று பூர்த்தி செய்ததால் அவருக்கு 23.05.2006 முதல் அடிப்படை சம்பளம் ரூ.11950+175 தனி ஊதியம் + 300 சிறப்பு ஊதியம் என சிறப்பு நிலை கால சம்பளமாக ரூ.10000–325–15200ல் நிர்ணயிக்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்4/257/2008**
**ஆணையாளர் அவர்களின் 28.04.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :245/2008 பொருள் எண்.39

**சிறப்பு நிலை வழங்க அனுமதி**

மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர். திருமதி. எம்.பி.எம்.நாச்சியார், மருத்துவ அலுவலர் அவர்கள் இருபதாண்டு பணியை முடித்துள்ளார். அவருக்கு சிறப்பு நிலை கால சம்பள ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டும்.

டாக்டர். திருமதி. எம்.பி.எம்.நாச்சியார், மருத்துவ அலுவலராக 18.02.1985 அன்று பணியமர்த்தப்பட்டார். இவரது பணி நியமனம் அரசாணை எண்.1279 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள். 25.09.1991ன்படி உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. தனியர் 19.02.1987 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. தனியர் துறைத்தேர்வு அனைத்தும் தேர்ச்சி பெற்றுள்ளார்.

கணக்கு அலுவலர், இந்திய மக்கள் தொகைத்திட்டம் அவர்கள் தனியருக்கு 21.02.2005 முதல் சிறப்பு நிலை கால சம்பள விகிதம் அனுமதித்து அவரது அடிப்படை ஊதியத்தை ரூ. 12275+125 தனிஊதியம் + 300 சிறப்பு ஊதியம் என சிறப்பு நிலை கால சம்பளம் 10000–325–15200ல் நிர்ணயிக்கலாம் என குறிப்புரை வழங்கியுள்ளார்.

தனியர் மீது துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை. இவரது பணிக்காலத்தை பற்றிய விவரங்கள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மருத்துவ அலுவலரின் பெயர் | முதன் முதலில் நியமன நாள் / பணிவரன் முறை செய்த நாள் | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் | சம்பளம் இல்லா விடுப்பு துய்த்த நாள் | இருபதாண்டு பணியை முடித்த நாள் |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 |
| 01. | டாக்டர். திருமதி. எம்.பி.எம்.நாச்சியார் | 18.02.1985 | 19.02.1987 | இல்லை | 20.02.2005 |

| முந்தைய ஆண்டுகளில் தண்டனை வழங்கப்ட்ட விவரம் | தண்டனை முற்று பெற்ற நாள் | சிறப்பு நிலை ஊதியம் பெற தகுதியுடயவரா | சிறப்பு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|
| 07 | 08 | 09 | 10 |
| ஏதுமில்லை | – – – | ஆம் | 21.02.2005 |

தனியருக்கு சிறப்பு நிலை கால சம்பளம் வழங்குவதால் மருத்துவ அலுவலர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

எனவே, டாக்டர். திருமதி. எம்.பி.எம். நாச்சியார், மருத்துவ அலுவலர் பதவியில் 20 ஆண்டு பணியை 20.02.2005 அன்று பூர்த்தி செய்ததால் அவருக்கு 21.02.2005 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 12275+125 தனி ஊதியம் + 300 சிறப்பு ஊதியம் என சிறப்பு நிலை கால சம்பளமாக ரூ. 10000–325–15200ல் நிர்ணயிக்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்4/374/2008**
**ஆணையாளர் அவர்களின் 28.04.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :246/2008 பொருள் எண்.40

**சிறப்பு நிலை வழங்க அனுமதி**

மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர். திருமதி. கே.பி.பிரசன்னா, மருத்துவ அலுவலர் அவர்கள் இருபதாண்டு பணியை முடித்துள்ளார். அவருக்கு சிறப்பு நிலை கால சம்பள ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டும்.

டாக்டர். திருமதி. கே.பி.பிரசன்னா, மருத்துவ அலுவலராக 08.09.1986 அன்று பணியமர்த்தப்பட்டார். இவரது பணி நியமனம் அரசாணை எண்.1279 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள். 25.09.1991ன்படி உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. தனியர் 08.09.1988 முதல் பணி தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. தனியர் துறைத்தேர்வு அனைத்தும் தேர்ச்சி பெற்றுள்ளார்.

கணக்கு அலுவலர், இந்திய மக்கள் தொகைத்திட்டம் அவர்கள் தனியருக்கு 08.09.2006 முதல் சிறப்பு நிலை கால சம்பள விகிதம் அனுமதித்து அவரது அடிப்படை ஊதியத்தை ரூ. 11950+175 தனிஊதியம் + 300 சிறப்பு ஊதியம் என சிறப்பு நிலை கால சம்பளம் 10000–325–15200ல் நிர்ணயிக்கலாம் என குறிப்புரை வழங்கியுள்ளார்.

தனியர் மீது துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை. இவரது பணிக்காலத்தை பற்றிய விவரங்கள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மருத்துவ அலுவலரின் பெயர் | முதன் முதலில் நியமன நாள் / பணிவரன் முறை செய்த நாள் | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் | சம்பளம் இல்லா விடுப்பு துய்த்த நாள் | இருபதாண்டு பணியை முடித்த நாள் |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 |
| 01. | டாக்டர். திருமதி. கே.பி.பிரசன்னா, | 08.09.1986 | 08.09.1988 | இல்லை | 07.09.2006 |

| முந்தைய ஆண்டுகளில் தண்டனை வழங்கப்ட்ட விவரம் | தண்டனை முற்று பெற்ற நாள் | சிறப்பு நிலை ஊதியம் பெற தகுதியுடயவரா | சிறப்பு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|
| 07 | 08 | 09 | 10 |
| ஏதுமில்லை | – – – | ஆம் | 08.09.2006 |

தனியருக்கு தேர்வு நிலை கால சம்பளம் வழங்குவதால் மருத்துவ அலுவலர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

எனவே, டாக்டர். திருமதி. கே.பி.பிரசன்னா, மருத்துவ அலுவலர் பதவியில் 20 ஆண்டு பணியை 07.09.2006 அன்று பூர்த்தி செய்ததால் அவருக்கு 08.09.2006 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 11950+175 தனி ஊதியம் + 300 சிறப்பு ஊதியம் என சிறப்பு நிலை கால சம்பளமான ரூ. 10000–325–15200ல் நிர்ணயிக்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்4/256/2008**
**ஆணையாளர் அவர்களின் 28.04.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :247/2008 பொருள் எண்.41

**சிறப்பு நிலை வழங்க அனுமதி**

மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர். திருமதி. கே.பரிமளா, மருத்துவ அலுவலர் அவர்கள் இருபதாண்டு பணியை முடித்துள்ளார். அவருக்கு சிறப்பு நிலை கால சம்பள ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டும்.

டாக்டர். திருமதி. கே.பரிமளா, மருத்துவ அலுவலராக 16.07.87அன்று பணியமர்த்தப்பட்டார். இவரது பணி நியமனம் அரசாணை எண்.1279 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள். 25.09.1991ன்படி உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. தனியர் 13.10.1989 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. தனியர் துறைத்தேர்வு அனைத்தும் தேர்ச்சி பெற்றுள்ளார்.

கணக்கு அலுவலர், இந்திய மக்கள் தொகைத்திட்டம் அவர்கள் தனியருக்கு 16.07.2007 முதல் சிறப்பு நிலை கால சம்பள விகிதம் அனுமதித்து அவரது அடிப்படை ஊதியத்தை ரூ. 12275+125 தனிஊதியம் + 300 சிறப்பு ஊதியம் என சிறப்பு நிலை கால சம்பளம் 10000–325–15200ல் நிர்ணயிக்கலாம் என குறிப்புரை வழங்கியுள்ளார்.

தனியர் மீது துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை. இவரது பணிக்காலத்தை பற்றிய விவரங்கள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் 01 | மருத்துவ அலுவலரின் பெயர் 02 | முதன் முதலில் நியமன நாள் / பணிவரன் முறை செய்த நாள் 03 | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் 04 | சம்பளம் இல்லா விடுப்பு துய்த்த நாள் 05 | இருபதாண்டு பணியை முடித்த நாள் 06 |
|---|---|---|---|---|---|
| 01. | டாக்டர். திருமதி. கே.பரிமளா, | 16.07.1987 | 13.10.1989 | இல்லை | 15.07.2007 |

| முந்தைய ஆண்டுகளில் தண்டனை வழங்கப்ட்ட விவரம் 07 | தண்டனை முற்று பெற்ற நாள் 08 | சிறப்பு நிலை ஊதியம் பெற தகுதியுடயவரா 09 | சிறப்பு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் 10 |
|---|---|---|---|
| ஏதுமில்லை | – – – | ஆம் | 16.07.2007 |

தனியருக்கு தேர்வு நிலை கால சம்பளம் வழங்குவதால் மருத்துவ அலுவலர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

எனவே, டாக்டர். திருமதி. கே.பரிமளா, மருத்துவ அலுவலர் பதவியில் 20 ஆண்டு பணியை 15.07.2007 அன்று பூர்த்தி செய்ததால் அவருக்கு 16.07.2007 முதல் அடிப்படை சம்பளம் ரூ.12275+125 தனி ஊதியம் + 300 சிறப்பு ஊதியம் என சிறப்பு நிலை காலமுறை சம்பள விகிதமாக ரூ.10000–325–15200ல் நிர்ணயிக்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :248/2008 பொருள் எண்.42

சிறப்பு நிலை வழங்க அனுமதி

டாக்டர். திருமதி. கே. விஜயா, மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் அவர்கள் மருத்துவ அலுவலராக சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்துறையில் 24.07.78 ல் பணியில் சேர்ந்தார். இவரது தொடர்பணியினை அரசாணை எண். 318 H&FW நாள் 27.02.80ன்படி 31.10.79 பிற்பகல் முதல் பணி வரன்முறைப்படுத்தியும் அரசாணை எண். 2469 H&FW நாள் 18.12.82ன் படி 29.01.82 முதல் தகுதிகாண் பருவம் பூர்த்தியடைந்தவராகவும் அறிவிக்கப்பட்டுள்ளார்.

மன்ற தீர்மானம் எண். 350/98 நாள்.29.04.98ன்படி இவர் சென்னை மாநகராட்சியில் முதலில் பணியில் சேர்ந்த நாள் 24.07.78 ஐ கணக்கிட்டு தேர்வு நிலை 10.08.89 முதல் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இவரது பணியினை 31.10.79 பிற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி அரசாணை வழங்கப்பட்டுள்ளதால், பணி வரன்முறைப் படுத்தப்பட்ட நாள் முதல் கணக்கிட்டு இவரின் 10 ஆண்டு பணி முடித்து 24.8.90 ல் தேர்வு நிலையை மாற்றியமைக்க பகுதி கணக்கு குழுமம் மாவட்ட குடும்ப நலம் கணக்கு அலுவலர் ஒப்புதல் வழங்கியுள்ளார். இதனால் தேர்வு நிலையில் இவருக்கு அதிகம் வழங்கப்பட்ட தொகை ரூ. 1830 ஐ பிடித்தம் செய்யப்படவேண்டும்.

டாக்டர். திருமதி. கே. விஜயா அவர்கள், மருத்துவ அலுவலர் பதவியில் 20 ஆண்டுகள் 23.8.2000 பிற்பகல் வரை தொடர்பணி புரிந்துள்ளதால் இவருக்கு 24.8.2000 முதல் சிறப்பு நிலை ஊதியம் வழங்கப்படவேண்டும். மருத்துவ அலுவலரின் காலமுறை சம்பளம் ரூ. 8000–275–13500. சிறப்பு நிலையில் மருத்துவ அலுவலரின் காலமுறை சம்பளம் ரூ. 10000–325–15200 ஆகும். இவரின் ஊதியம் சிறப்பு நிலையில் ரூ. 11300+300(சிறப்பு ஊதியம்) / 10000–325–15200, 24. 08. 2000 முதல் வழங்க கணக்கு அலுவலர் ஒப்புதல் அளித்துள்ளார்.

தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகள் எவ்வித குற்றச்சாட்டும் நிலைவையில் இல்லை. தனியர் மீது தனிப்பட்ட மற்றும் கூட்டு பொருப்பிலோ தனிக்கை தடை ஏதுமில்லை. இவரது பணிக்காலத்தை பற்றிய விவரங்கள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருத்தியமைக்கப்படவேண்டிய தேர்வுநிலை

| வ. எண் 01 | மருத்துவ அலுவலரின் பெயர் 02 | முதன் முதலில் நியமன நாள் / பணிவரன் முறை செய்த நாள் 03 | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் 04 | சம்பளம் இல்லா விடுப்பு துய்த்த நாள் 05 | பத்தாண்டு பணியை முடித்த நாள் 06 |
|---|---|---|---|---|---|
| 01. | டாக்டர். கே. விஜயா | 31.10.1979 | 29.01.1982 | 22.06.84 to 14.04.85 | 23.08.1990 |

| முந்தைய ஆண்டுகளில் தண்டனை வழங்கப்பட்ட விவரம் 07 | தண்டனை முற்று பெற்ற நாள் 08 | தேர்வு நிலை ஊதியம் பெற தகுதியுடயவரா 09 | தேர்வு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் 10 |
|---|---|---|---|
| ஏதுமில்லை | – – – | ஆம் | 24.08.1990 |

**மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்4/2891/2007**

| ஏற்கனவே தவறுதலாக வழங்கப்பட்ட தேர்வுநிலை 11 | தற்போது வழங்கப்பட வேண்டிய தேர்வுநிலை 12 | பிடித்தம் செய்ய வேண்டிய தொகை 13 |
|---|---|---|
| 10.08.1989 | 24.08.1990 | ரூ. 1835/– |

தற்போது வழங்கப்படவேண்டிய சிறப்பு நிலை

| வ. எண் 01 | மருத்துவ அலுவலரின் பெயர் 02 | முதன் முதலில் நியமன நாள் / பணிவரன் முறை செய்த நாள் 03 | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் 04 | சம்பளம் இல்லா விடுப்பு துய்த்த நாள் 05 | இருபதாண்டு பணியை முடித்த நாள் 06 |
|---|---|---|---|---|---|
| 01. | டாக்டர். கே. விஜயா | 31.10.1979 | 29.01.1982 | 22.06.84 to 14.04.85 | 23.08.2000 பி.ப |

| முந்தைய ஆண்டுகளில் தண்டனை வழங்கப்ட்ட விவரம் 07 | தண்டனை முற்று பெற்ற நாள் 08 | சிறப்பு நிலை ஊதியம் பெற தகுதியுடயவரா 09 | சிறப்பு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் 10 |
|---|---|---|---|
| ஏதுமில்லை | --- | ஆம் | 24. 08. 2000 |

எனவே, தனியர் மருத்துவ அலுவலர் பதவியில் சிறப்பு நிலை கால ஊதியம் வழங்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக கோப்பு சமர்பிக்கப்பட்டதில் நியமனக்குழு தீர்மான எண்.089/2008, நாள்.17.04.2008ல் இப்பொருள் மீது ஒத்திவைத்து நியமனக்குழு தீர்மானிக்கப்பட்டது.

எனவே, டாக்டர். திருமதி. கே. விஜயா, மருத்துவ அலுவலர் அவர்களுக்கு தேர்வுநிலை கால ஊதியம் 24.08.90 முதல் திருத்தியமைத்து அடிப்படை ஊதியம் ரூ. 2575 + 150 சி.ஊதிய பொருத்தம் ரூ. 9100–275–14050 ல் நிர்யணயிப்பதற்கும் மற்றும் தனியர் அவர்கள் மருத்துவ அலுவலர் பதவியில் 20 வருடங்கள் மருத்துவ அலுவலர் பதவியை 23.08.2000 ல் பூர்த்தி செய்துள்ளதால் 24.08.2000 முதல் அடிப்படை ஊதியம் ரூ. 11300+ 300 சி.ஊதியம் என சிறப்பு நிலை கால சம்பளமாக ரூ. 10000–325–15200ல் நிர்ணயிப்பதற்கு மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ2.ந.க.எண்.இ3/6179/2004**
**ஆணையாளர் அவர்களின் 12.05.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :249/2008 பொருள் எண்.43

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

திரு.என்.கஜேந்திரன், உருளை ஒட்டுநர், மண்டலம்–2, அவர்கள் கடந்த 16.08.2004 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமைக்கு 16.10.2004 அன்று குறிப்பாணை கொடுத்து விளக்கம் கேட்கப்பட்டது. அதற்கு தனியர் தனது 06.12.2004 நாளிட்ட விளக்க கடிதத்தில் தனக்கு காசநோய் ஏற்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொண்டதால் முன்னறிவிப்பின்றி பணிக்கு வர இயலவில்லை. என்றும் தன்னை மன்னித்து பணியில் சேர அனுமதிக்க வேண்டி விளக்கம் அளித்தார். தனது விளக்கத்துடன் 16.08.2004 முதல் 05.12.2004 வரை மருத்துவ விடுப்பும் 06.12.2004 அன்று தகுதி சான்றும் ஓட்டேரி காசநோய் மருத்துவமனையில் இருந்து பெற்று இணைத்துள்ளார். தனியர் அளித்த விளக்கம் ஏற்புடையதாக இல்லாததால் அன்னாருக்கு விதி 9(1)ன் கீழ் குற்றக்குறிப்பாணை 28.12.2004 அன்று கொடுத்து விளக்கம் கோரப்பட்டது அதில்,

1. தாங்கள் எந்தவித தகவலும் இன்றி பணிக்கு வராமல் இருந்துள்ளது தங்கள் பணியின் மீதுள்ள உதாசீனத்தைக்காட்டுகிறது.
2. தாங்கள் 16.08.2004 முதல் எந்த வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருந்ததற்கு கொடுக்கப்பட்ட குறிப்பாணை விளக்கம் ஏற்க கூடியதாக இல்லை.
3. மேலும் தாங்கள் எந்தவித விடுப்பு துய்த்தாலும் தாங்கள் அதனை 7 நாட்களுக்குள் தெரியப்படுத்த தவறியுள்ளீர், இது அலுவலக விதி முறைகளை மீறுவதாக உள்ளது.
4. தாங்கள் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருந்ததால் பகுதி–6ன் சாலை ஒட்டும் பணி பாதிப்படைந்துள்ளது.

மேற்கண்ட குற்றக் குறிப்பாணைக்கு தனியர் தனது 07.01.2005 நாளிட்ட விளக்கத்தில் தான் காசநோயால் பாதிக்கப்பட்டதால் அலுவலகத்திற்கு தெரிவிக்க இயலவில்லை என்றும் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமைக்கு தன்னை மன்னிக்கும்படியும் தான் காசநோயால் பாதிக்கப்பட்டதால் அதற்கான மருத்துவ சான்றினை அளித்ததற்கு தன்னை மன்னிக்கும்மாறும், இனி வருங்காலங்களில் தான் இவ்வாறு செய்யமாட்டேன் என்றும் சாலைப் பணிகள் பாதிப்படையாமல் பணிபுரிவேன் என்றும் தான் காசநோய் மருத்துவ சிகிச்சை மேற்கொண்டதற்கான மருத்துவ சான்று மற்றும் பணியில் சேர்வதற்கான உடல் தகுதி சான்று இணைத்துள்ளதாகவும் விளக்கம் அளித்துள்ளார். தனியர் அளித்த விளக்கம் ஏற்புடையதாக இல்லாததால் தனது விளக்கத்தை உரிய அலுவலர் மூலம் துறைத் தலைவரை அனுக வேண்டும் என்று அறிவுறுத்தியதில் தனியர் தன்னிச்சையாக மீண்டும் பணிக்கு வராமல் 21.01.2006 அன்று தனது கடிதத்தில் தனது இடது கால் செயல் இழந்ததால் அதற்கான சிகிச்சை மேற்கொள்ள நாட்டு வைத்தியத்திற்காக சொந்த கிராமத்திற்கு சென்றதாகவும், அதனால் பணிக்கு வர இயலாமல் போனது என்றும் தற்போது தனக்கு குணம் ஆகிவிட்டதால் தன்னை பணியில் சேர்க்கவும் கடிதம் அளித்துள்ளார். தனியரை உரிய அலுவலர் மூலம் தன்னுடைய விளக்கத்தை அளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியும் தனியர் 09 மாதங்கள் கழித்து வந்த கடிதம் அளித்ததாலும் தனியர் விதி 9(1)ன் கீழ் கொடுக்கப்பட்ட குறிப்பாணைக்கு விளக்கம் ஏற்க கூடியதாக இல்லை. மேலும் தனியர் பணிக்கு வராத காலம் 1 ஆண்டு கடந்தமையால் விதி 9(1) குறிப்பாணை விலக்கி விதி 9(2)ன் கீழ் குற்றச்சாட்டு ஏற்படுத்தப்பட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது.

**குற்றச்சாட்டு–1**

தாங்கள் எந்தவித தகவலும் இன்றி பணிக்கு வராமல் இருந்துள்ளது தங்கள் பணியின் மீதுள்ள உதாசீனத்தைக் காட்டுகிறது.

**குற்றச்சாட்டு–2**

தாங்கள் 16.08.2004 முதல் எந்தவித முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருந்ததற்காக கொடுக்கப்பட்ட குறிப்பாணைக்கு தாங்கள் கொடுத்த விளக்கம் ஏற்புடையதாக இல்லை.

**குற்றச்சாட்டு–3**

தாங்கள் எந்த வித மருத்துவ விடுப்பு துய்த்தாலும் தாங்கள் அதனை 7 நாட்களுக்குள் தெரியப்படுத்த தவறியுள்ளீர்.

**குற்றச்சாட்டு–4**

தாங்கள் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருந்ததால் பகுதி–6ன் சாலை ஒட்டுப் பணிகள் பாதிப்படைந்துள்ளது.

<u>ம.அ2.ந.க.எண்.இ3/6179/2004</u>

மேற்கண்ட குற்றக் குறிப்பாணைக்கு தனியர் சமர்ப்பித்த 03.03.2006 நாளிட்ட விளக்கத்தில் தான் 16.08.2004 முதல் 05.12.2004 வரை காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளதால் அதற்குறிய மருத்துவ சான்றிதழ் அளித்து 06.12.2004 பணியில் சேர கடிதம் அளித்ததாகவும், தன்னை பணியில் சேர்க்கவில்லை என்றும், மீண்டும் தனக்கு குறிப்பாணை வழங்கப்பட்டு அதற்கு தான் 07.01.2005 அன்ற உரிய விளக்கம் அளிக்கப்பட்டதாகவும் இருந்தும் தன்னை பணிக்கு அலை கழிக்கப்பட்டது என்றும், மீண்டும் மண்டல அலுவலர் அறிவுரைப்படி உதவி செயற் பொறியாளரை காணச்சென்றும் தன்னை பணிக்கு எடுத்துக்கொள்ளவோ அதற்கான விளக்கத்தை தனது 04.03.2005 நாளிட்ட கடிதத்தில் விளக்கம் அளித்தும் தன்னை பணிக்கு எடுக்கவில்லை என்றும் இவ்வாறு தான் அலைகழிக்கப்பட்டதால் தனக்கு பக்கவாதம் ஏற்பட்டு அதனால் தனது இடது கால் நடக்க இயலாமல் ஆகிவிட்டது எனவும் அதனால் தான் சிகிச்சைகாக தனது கிராமத்திற்கு சென்று சிகிச்சை மேற்கொண்டதாக முன்னறிவிப்பு செய்ய இயலவில்லை. தான் நலமடைந்து விட்டதால் பணிக்கு சேர 20.01.2006 அன்று கடிதம் அளித்துள்ளதாகவும், மேலும் தான் பணிக்காலம் முடிந்து 31.07.2006 அன்று வயது முதிர்வு அடிப்படையில் ஒய்வு பெறுவதால் தன்னை பணியில் சேர்ந்து ஒய்வு பெற அனுமதிக்கும்படி விளக்கம் அளித்துள்ளார்.

ஒழுங்கு நடவடிக்கை முடிவுக்கு கொண்டு வர வேண்டி தொடர்ந்து நேர்முக விசாரணை மேற்கொள்ள விசாரணை அலுவலர் நியமித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு விசாரணை அறிக்கை பெறப்பட்டது. அவ்விசாரணை அறிக்கையில் தனியர் மீது சாட்டப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளும் நிருபணமாகி உள்ளது என்று தெரிவித்துள்ளார். இவ்விசாரணை அறிக்கை தனியருக்கு சார்பு செய்து தனியரின் மேல் விளக்கம் பெறப்பட்டது.

தனியர் அளித்துள்ள மேல் விளக்கத்தில் ஏற்கெனவே குற்றச்சாட்டுக் குறிப்பாணைக்கு சமர்பித்துள்ள விளக்கத்தினையே சமர்பித்துள்ளார். மேலும் தான் இது வரை எந்தவித புகாரும் இன்றி 30 ஆண்டுகள் பணி செய்து கொண்டு வருகின்றேன். என்றும் மேலும் தான் 31.07.2006 அன்று பணி ஒய்வு பெற இருப்பதால் தன்னை மன்னித்து பணியில் சேர அனுமதிக்கும்மாறு வேண்டியுள்ளார்.

தனியர் மீதான குற்றச்சாட்டுகள், தனியரின் விளக்கம் விசாரணை அலுவலரின் அறிக்கை ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. விசாரணை அலுவலர் அவர்கள் தனது அறிக்கையில் தனியர் மீது சாட்டப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகிறது என்று தெரிவித்துள்ளார். நிருபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் கடுமையானவை மற்றும் தண்டனைக் குறியதாக இருப்பினும் இந்நிகழ்வு கருணையுடன் அனுகப்பட்டு

1. தனியரை மீண்டும் பணியில் சேர அனுமதித்தும்,

2. தனியர் 16.08.2004 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமைக்காக விதி 9(2)ன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் மீது இறுதி ஆணையாக ரூ.3000/– அபராதம் விதித்தும்,

தனியர் பணிக்கு வராத காலமான 16.08.2004 முதல் 27.07.2006 வரை உள்ள காலம் ஓராண்டுக்கு மேல் உள்ளதால் அக்காலத்தை வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(1)ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக மனறத்தின் அனுமதி பெற்று அரசுக்கு அனுப்பி வரன்முறைப்படுத்தப்படும் என தெரிவித்தும் செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டது.

தனியர் செயல்முறை ஆணையின் நகலை பெற்றுக்கொண்டு ஆட்சேபணை ஏதுவும் தெரிவிக்கவில்லை.

தனியர் 16.08.2004 முதல் 27.07.2006 வரையிலான காலம் ஓராண்டை கடந்துள்ளதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு அனுப்பி வரன்முறை படுத்திடப்படவேண்டும்.

எனவே, திரு.என்.கஜேந்திரன், உருளை ஓட்டுநர், மண்டலம்–2, என்பவர் பணிக்கு வராத காலமான 16.08.2004 முதல் 27.07.2006 வரையிலான காலம் ஓராண்டை கடந்துள்ளதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்து அரசாணை பெறுவதற்கு அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.2.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ4.ந.க.எண்.அ7/5460/2005**
**ஆணையாளர் அவர்களின் 09.04.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :250/2008 பொருள் எண்.44

**பணிக்குவராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

திரு.கே.கொண்டைய்யா, துப்புரவு பணியாளர், கோட்டம்–63, பகுதி–11, மண்டலம்–4ல் பணிபுரிந்து 28.02.1992 அன்று காலமானார். அன்னாரின் வாரிசுதாரரான மகன் நாகேஸ்வரராவ் என்பவருக்கு கூட்டு காப்பீட்டு தொகை ரூ.60,000/– வழங்கப்பட்டுள்ளது.

தணிக்கைத்துறை கடிதத்தில் மறைந்த திரு.கே.கொண்டைய்யா, துப்புரவு பணியாளர், அவர்கள் 01.06.1988 முதல் 08.12.1989 முடிய தொடர்ச்சியாக 1 1/2வருடங்கள் பணிக்கு வராமல் இருந்தமைக்காக அடிப்படை விதி 18(3)ன்படி அரசின் பின்னேற்பு ஆணை பெறப்பட வேண்டும் எனவும், அது பெறப்பட்ட பின்னர் தான் தணிக்கைச் சான்று வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

திரு.கே.கொண்டைய்யா, துப்புரவு பணியாளர், அவர்கள் 01.06.1988 முதல் 08.12.1989 முடிய முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருந்ததற்காக ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு இவர் மீதுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு மருத்துவக்குழுவின் கருத்துரைக்கு அனுப்பப்பட்டது. மருத்துவக்குழுவின் அறிக்கையின்படி அன்னாரின் குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டும் இத்தனியரை கடுமையாக எச்சரித்தும் அன்னார் பணிக்கு வராத காலத்தை தகுதியுள்ள விடுப்பாக பாவித்தும் இறுதி ஆணை அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, இறந்த பணியாளர் 01.06.1988 முதல் 08.12.1989முடிய 1 1/2வருடங்கள் பணிக்கு வராத காலத்தை சம்பளமில்லா விடுப்பு அனுமதித்தற்கு வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(1)ஐ தளர்வு செய்து அரசாணை பெற முன்மொழிவு அனுப்பி அரசின் ஆணை பெறுவதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.4.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்15/3628/92**
**ஆணையாளர் அவர்களின் 04.04.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :251/2008 பொருள் எண்.45

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

மாவட்ட குடும்ப நலத்துறையில் பணிபுரிந்து வந்த திரு.கே.சந்தானம், இளநிலை உதவியாளர், (தற்போது பணிபுரியும் இடம் மண்டலம்–1) அவர்கள் இத்துறையில் பணிபுரிந்தபோது அஞ்சலக சேமிப்பு தொகையை அஞ்சலகத்தில் செலுத்துவதில் ஏற்பட்ட முறைகேடுகளுக்காக 02.09.1992 அன்று தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டார். இவர் மீது சென்னை மாநகராட்சி மூன்றாம் மற்றும் நான்காம் நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1982 துணை விதி 9(2)ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு விளக்கம் கேட்கப்பட்டு, விளக்கம் பெறப்பட்டது. இவர் ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி 11.08.2000 அன்று மீண்டும் பணியில் சேர்க்கப்பட்டார்.

இவர் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் மீது இறுதி ஆணையாக 03.11.2004 தேதியிட்ட செயல்முறை ஆணையில் அன்னாரது ஊதிய உயர்வினை மூன்றாண்டுகளுக்கு திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்து உத்தரவிடப்பட்டது.

தனியர் தமக்கு வழங்கப்பட்ட தண்டனையை மறு பரிசீலனை செய்யக் கோரி தலைவர் நியமனக்குழு அவர்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் மேல்முறையீடு செய்தார். இவரது மேல்முறையீட்டு மனு நியமனக்குழுவால் பரிசீலிக்கப்பட்டு தனியருக்கு நிர்வாகம் வழங்கிய தண்டனையான மூன்றாண்டுகளுக்கு ஊதிய உயர்வு திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்ததை உறுதி செய்து தீர்மானித்தது. இத்தீர்மானத்தினை தெரிவித்து 17.11.2005 தேதியிட்ட செயல்முறை ஆணையில் உத்தரவிடப்பட்டது.

தனியர் தனக்கு வழங்கப்பட்ட தண்டனையை மறுபரிசீலனை செய்யக் கோரி 31.01.2006 அன்று அரசுக்கு சீராய்வு மனு அளித்துள்ளார். இவரது சீராய்வு மனு அரசால் பரிசீலிக்கப்பட்டு 12.10.2007 தேதியிட்ட அரசாணையில் நிராகரித்து ஆணையிடப்பட்டது.

இவர் தற்காலிக பணி நீக்கத்தில் வைக்கப்பட்டிருந்த காலத்தை வரன்முறைப்படுத்த வேண்டும். இவர் அடிப்படை விதி 18(2)ல் வரையறுக்கப்பட்டுள்ள கால கெடுவுக்கு அதிகமாக தற்காலிக பணி நீக்கத்தில் வைக்கப்பட்டிருந்த இக்காலத்தினை முறைப்படுத்த அவ்விதியை தளர்வு செய்து அரசாணை பெறப்பட வேண்டும்.

எனவே, திரு.கே.சந்தானம், இளநிலை உதவியாளர், அவர்கள் 02.09.1992 முதல் 10.08.2000 வரை தற்காலிக பணி நீக்கத்தில் வைக்கப்பட்டிருந்த காலத்தை வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(2)க்கு அரசின் தளர்வாணை கோரி அரசுக்கு முன்மொழிவு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>வ.து.ந.க.எண்.அ1/4498/08</u>**

**<u>ஆணையாளர் அவர்களின் 15.04.2008 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :252/2008 பொருள் எண்.46

<u>பணி வரன்முறைப்படுத்துதல்</u>

மன்றத்தீர்மான என் 551/07 நாள்.29.10.07 மற்றும் 570/07 நாள்.28.11.07ன்படி பின்வரும் வரிமதிப்பீட்டாளர்கள் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு ரூ.8000–275–13500 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக உதவி வருவாய் அலுவலர்களாக ஆணையரின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ2/16651 மற்றும் 16651–ஏ/2007 நாள்.10.12.2007ன்படி பதவி உயர்வு வழங்கப்பட்டது.

| வ.எண் | வரி மதிப்பீட்டாளர்களின் பெயர் | உதவி வருவாய் அலுவலர் பதவியில் பொறுப்பேற்றுக் கொண்ட நாள் |
|---|---|---|
| 1 | திரு.ஏ. கோதண்டராமய்யா | 12.12.2007 முற்பகல் |
| 2 | திரு.ஆர். தண்டபாணி | 13.12.2007 முற்பகல் |
| 3 | திரு.எம். ஸ்ரீ ராமுலு | 12.12.2007 பிற்பகல் |
| 4 | திரு.சி. முனுசாமி | 13.12.2007 முற்பகல் |
| 5 | திரு. முகமதுஉதுமான் | 12.12.2007 முற்பகல் |

இப்பணி நியமனத்திற்கு அரசாணை (ப) எண்.142, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–3) துறை, நாள்.26.03.08ல் அரசு உறுதியாக்கம் வழங்கியுள்ளதை தொடர்ந்து இவர்களது பணிகள் உதவி வருவாய் அலுவலர் பதவியில் மேற்படி பட்டியலில் உள்ளபடி பணியில் சேர்ந்த நாள் முதல் பணி வரன்முறைப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: வ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :253/2008 பொருள் எண்.47

**பணிவரன் முறைப்படுத்துதல்**

மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பட்டியலில் இடம் பெற்ற டாக்டர்.ஆர்.சொல்லின் செல்வன், என்பவரை அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு ரூ.6500–250–11,100 என்ற ஊதிய விகிதத்தில் மன்றத் தீர்மான எண்.370/07 நாள்.30.07.2007ஐ தொடர்ந்து இவ்வலுவலக செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/7579/07 நாள். 30.08.2007ன்படி தற்காலிகமாக உதவி கால்நடை மருத்துவராக 07.09.2007 முதல் பணிநியமனம் செய்யப்பட்டார். இதனை தொடர்ந்து இவரது பணிநியமனத்திற்கு அரசின் உறுதியாக்கம் கோரி அரசுக்கு செயற் குறிப்புகள் அனுப்பப்பட்டன.

11.03.2008 நாளிட்ட அரசாணை எண்.97 ந.நி.ம.கு.வ.துறை, நாள்.11.03.2008ல் தனியரின் பணி நியமனத்திற்கு உறுதியாக்கம் வழங்கியுள்ளது. இதனை தொடர்ந்து தனியரின் பணியினை 07.09.2007 முதல் உதவி கால்நடை மருத்துவர் பதவியில் வரன்முறை செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## சு.து.ந.க.எண்.சி.1/1329/1997
## ஆணையாளர் அவர்களின் 14.05.2008 நாளிட்ட குறிப்பு

## 19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :254/2008 பொருள் எண்.48

### பணிவரன்முறைப்படுத்த அனுமதி

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையில் காலியாக இருந்த உதவி சுகாதார அலுவலர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் விளம்பரம் செய்து 26 விண்ணப்பங்கள் பெறப்பட்டு தேர்வு குழுவினரால் நேர்காணல் நடத்தப்பட்டு அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு திருவாளர்கள் டாக்டர்.ஜி.சீனிவாஸ், டாக்டர்.எம்.ஜெகதீசன், டாக்டர்.ராஜசேகரன், மற்றும் டாக்டர்.ஜி.ராஜ்குமார், ஆகியோர் ரூ.9100–275–14500 என்ற ஊதிய விகிதத்தில் உதவி சுகாதார அலுவலர் பணியிடத்தில் 23.06.1999 நாளிட்ட செயல்முறை ஆணைப்படி பணி நியமனம் செய்யப்பட்டனர். இவர்களில் ஜி.சீனிவாஸ் என்பவர் பணியில் சேரவில்லை. மற்ற மூவரும் பணியில் சேர்ந்தனர் பின்னர் மன்றத்தின் அனுமதி பெற்று இவர்களது பணி நியமனத்திற்கு உறுதியாக்கம் வேண்டி அரசிற்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டன.

டாக்டர்.எம்.ஜெகதீசன், உதவி சுகாதார அலுவலர், பதவிக்கான கல்வித் தகுதிக்கு இணையான சமுதாய மருத்துவத்தில் பட்ட மேற்படிப்பு படித்துள்ள நிலையில் கல்வித் தகுதி விதித்தளர்வு மற்றும் எம்.ஜெகதீசன், மற்றும் டாக்டர்.ராஜசேகரன், ஆகியவர்களுக்கு வயது வரம்பு தளர்வும் கோரப்பட்டது. அரசு தனது 09.08.2007 நாளிட்ட ஆணையில் டாக்டர்.எஸ்.ராஜசேகரன், மற்றும் டாக்டர்.ஜி.ராஜ்குமார் ஆகியோர் உதவி சுகாதார அலுவலர்களாக பணி நியமனம் செய்யப்பட்டு பணியில் சேர்ந்த நாள் (முறையே 11.08.1999, 16.07.1999) முதல் உறுதியாக்கம் வழங்கியும் டாக்டர் எம்.ஜெகதீசன் மற்றும் டாக்டர்.ராஜசேகரன் இருவரும் வயது வரம்பு கடந்து பணி நியமனம் செய்யப்பட்டதற்கு வயது தளர்வும் டாக்டர்.எம்.ஜெகதீசன், உதவி சுகாதார அலுவலர், பதவிக்கான கல்வித் தகுதி விதித்தளர்வும் வழங்கியுள்ளது.

இது குறித்து தெரிவிப்பது டாக்டர்.எஸ்.ராஜசேகரன், உதவி சுகாதார அலுவலர், என்பவர் 31.12.2001ல் பணி துறப்பு செய்துள்ளதால் இவருக்கு பணிவரன் முறைப்படுத்த வேண்டிய அவசியமில்லை. மேலும் டாக்டர் எம்.ஜெகதீசன், உதவி சுகாதார அலுவலர் என்பவர் எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு திட்டம் தரமணியில் இரண்டாண்டு கால ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய 15.03.2004 முற்பகல் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார். இவர் சென்னை மாநகராட்சியிலிருந்து விடுவிக்கப்பட்டதற்கு அரசின் பின்னேற்பு ஆணை பெறப்பட்டுள்ளது. (அரசாணை (வாலாயம்) 570 ந.நி.ம.கு.வ.துறை நாள்.01.12.2004) இந்த இரண்டு ஆண்டு ஒப்பந்த பணிக்காலம் முடிவதற்கு முன்னரே 17.12.2004 பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சியின் முன் அனுமதி பெறாமல் வேறொரு அரசு நிறுவன பணியில் அதாவது தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தில் சேர்ந்துள்ளார். அரசு பணி விதிகளுக்கு முரணாக தாய்த் துறையான சென்னை மாநகராட்சியின் முன் அனுமதி பெறாமல் வேறொரு அரசு பணியில் சேர்ந்ததற்காக அன்னார் மீது 10(பி)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் இவர் வயது வரம்பு கடந்த நிலையில் உதவி சுகாதார அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டதற்கும் இப்பதவிக்கான கல்வித் தகுதிக்கான விதித் தளர்வு தளர்வாணையும் அரசால் வழங்கப்பட்டுள்ளது. இவரது பணி நியமனத்திற்கு உறுதி ஆக்கம் செய்வது குறித்து அரசாணையில் ஏதும் குறிப்பிடப்படவில்லை. ஆகவே இவரது பணிகளை வரன்முறைப்படுத்த அவர் மீது தொடரப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கையின் முடிவை பொறுத்து தனியே நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**சு.து.ந.க.எண்.சி.1/1329/1997**

டாக்டர்.ஜி.ராஜ்குமார், உதவி சுகாதார அலுவலர், அவர்கள் தமிழ் மொழி தேர்ச்சி பெறாததால் இவரது தகுதிகாண் பருவ காலம் நீட்டித்தும் தமிழ் மொழியில் தேர்ச்சி பெறவில்லை. பின்னர் இவர் நீதி மன்றத்தில் தடையாணை பெற்று கால தாமதமாக தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றுள்ளார். காலதாமதமாக தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றிருந்தாலும் இவரது பணியினை உறுதியாக்கம் செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ள நிலையில் இவர் சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்நத நாளான **16.07.1999** முதல் பணிவரன் முறைப்படுத்த வேண்டியுள்ளது. எனவே, டாக்டர்.ஜி.ராஜ்குமார், என்பவர் உதவி சுகாதார அலுவலராக பணியில் சேர்ந்த நாளான **16.07.1999** முதல் இப்பதவியில் இவரது பணியினை வரன்முறைப்படுத்திட மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>சு.து.ந.க.எண்.சி1/7532/06</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 31.03.2008 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :255/2008 பொருள் எண்.49

**<u>மருத்துவ அலுவலர் பணி நியமனத்திற்கு பின்னேற்பு அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி சுகாதார துறையில் மருத்துவ அலுவலர் பதவிக்கான காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை 01.04.2007 அன்று 31 ஆகும். மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பதவி சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 துணை விதி 85(3)(பி)ன்படி அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு மன்றம் நியமனம் செய்யும் அதிகாரம் பெற்றுள்ளது.

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ பணி விதிகள் 1998ன்படி மருத்துவ அலுவலர் (அலோபதி) பதவியினை நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டும். இப்பதவிக்கான காலமுறை ஊதிய விகிதம் ரூ.8000–275–13,500 கல்வித் தகுதி அங்கீரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தினால் வழங்கப்பட்ட எம்.பி.பி.எஸ். பட்டம் மற்றும் தமிழ்நாடு மருத்துவ அவையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

அரசாணை எண்.57 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.13.02.2007ன்படி 2006–2007ம் நிதி ஆண்டிற்கான 50 விழுக்காடு காலிப்பணியிடங்களை நிரப்ப அரசாணை எண்.85 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள்.06.05.2000ல் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளின்படி இன சுழற்சி பின்பற்றப்பட்டு அரசாணை எண்.65 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (N2) துறை நாள்.30.03.2007ல் தெரிவித்துள்ளபடி ஒரு காலிப்பணியிடத்திற்கு ஒரு நபர் என்ற அடிப்படையில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டு 19 மருத்துவ அலுவலர்கள் பணி நியமனம் செய்யப்பட்டனர்.

உதவி இயக்குநர் தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து 11.12.2007 அன்று பெறப்பட்ட கடிதத்தில், ஏற்கனவே அனுப்பப்பட்ட நபர் பட்டியலின் தொடர்ச்சி என தெரிவித்து ஒரு நபர் கொண்ட பட்டியல் அனுப்பப்பட்டது. இப்பெயர் பட்டியலில் டாக்டர்.கு.சிவகுமார். (பதிவு எண்.1997 M 11403 SF 01.10.1997 Schedule Caste) OC Non- Priority) என்ற மருத்துவரின் பெயர் இடம் பெற்றிருந்தது.

பொதுமக்கள் நலன் கருதி மருத்துவ அலுவலர் காலிப்பணியிடங்களை நிரப்புவது அவசரம் அவசியமாக கருதப்பட்டதால் மேற்கண்ட நபரை தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்து 20.12.2007 அன்று சான்றிதழ் சரிபார்க்கப்பட்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டும் மருத்துவ அலுவலராக இவருக்கு 21.02.2008 தேதியிட்டு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. இவர் 03.03.2006ல் பணியில் சேர்ந்தார்.

எனவே, திரு.கு.சிவகுமார் என்பவரை ரூ.8000–275–13,500 என்ற ஊதிய விகிதத்தில் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டும் 03.03.2008 முதல் தற்காலிகமாக மருத்துவ அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பும் இதன் தொடர்பாக அரசிற்கு செயற்குறிப்புகள் அனுப்பி அரசின் உறுதியாக்கம் பெறவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

சு.து.ந.க.எண்.சி1/2018/2007
ஆணையாளர் அவர்களின் 28.04.2008 நாளிட்ட குறிப்பு

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :256/2008 பொருள் எண்.50

**சித்தா மருத்துவ அலுவலர் பணி நியமனத்திற்கு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையில் ஒப்பளிக்கப்பட்ட சித்தா மருத்துவ அலுவலர் பணியிடங்கள் 3 ஆகும். இதில் ஒரு சித்தா மருத்துவ அலுவலர் பணியிடம் காலியாக உள்ளது.

சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ பணி விதிகள் 1998ன்படி மருத்துவ அலுவலர் (சித்தா) பதவியினை நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டும். இப்பதவிக்கான காலமுறை ஊதிய விகிதம் ரூ.8000–275–13500 கல்வித் தகுதி B.S.M.S.(A Degree in Bachelor of சித்தா Medicine and Surgery) தமிழ்நாடு சித்தா மருத்துவ அவையில் பதிவு செய்திருக்க வேண்டும்.

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையில் காலியாக உள்ள ஒரு சித்தா மருத்துவர் பணியிடத்தை நிரப்ப அரசாணை எண்.85, பணியாளர்கள் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள்.06.05.2000ல் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளின்படி இன சுழற்சி முறை பின்பற்றப்பட்டு ஒரு காலிப் பணியிடத்தை நிரப்ப வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டு இன சுழற்சி முறை பின்பற்றப்பட்டு, அரசாணை எண்.65,தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (N2) துறை நாள்.30.03.2007ல் தெரிவித்துள்ளபடி 1:1என்ற விகிதார அடிப்படையில் ஒரு பணியிடத்தை நிரப்ப வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு

| S.No | Registration Number | Name & Address | Date of Birth | Community |
|---|---|---|---|---|
| 01 | Dependent Ex-Service 1994 F 7972 S.F 28.12.1994 | P.Vijayasri D/o Ponnurangam 1A/27 Punitha Sagaya Matha Street, G.K.M.Colony, Chennai-82 | 20.05.1970 | Schedule Caste |

மேற்படி நபர் சித்தா மருத்துவ அலுவலர் பணிநியமனத்திற்கு தகுதி உள்ளவர் என்பதால், பொதுமக்கள் நலன் கருதியும் மற்றும் பொது மக்களுக்கு அன்றாட மருத்துவ சிகிச்சை அளிப்பதன் அவசர அவசியம் கருதியும் இவரை சித்தா மருத்துவ அலுவலர் பதவிக்கான காலமுறை ஊதிய விகிதமான ரூ.8000–275–13500ல் மற்றும் இதர படிகளுடன் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டும், சுகாதாரத்துறையில் காலியாக உள்ள சித்தா மருத்துவ அலுவலர் பணியிடத்தில் நியமனம் செய்து தற்காலிக பணி நியமன உத்திரவு வழங்கப்பட்டது. தனியர் 31.03.2008ல் பிற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்.

எனவே, மேற்படி நபரை சித்தா மருத்துவ அலுவலர், பதவிக்கான காலமுறை ஊதிய விகிதம் ரூ.8000–275–13500 மற்றும் இதர படிகளுடன் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பணிநியமனம் செய்யப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்5/597/2008**
**ஆணையர் அவர்களின் 11.04.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :257/2008 பொருள் எண்:51

**பணியமைப்பு – சென்னை மாநகராட்சி – மாவட்ட குடும்ப நலத்துறை – பலநோக்கு சுகாதார பணியாளர் – சீருடைப்படி உயர்வு – அரசு ஆணை (டி) எண்.457ஐ சென்னை மாநகராட்சியில் செயல்படுத்த அரசின் ஆணை பெற அனுமதி வேண்டுதல்.**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் பணி செய்து வரும் பலநோக்கு சுகாதார பணியாளர்கள் / துணைச் செவிலியர்கள் / மகப்பேறு உதவியாளர்களுக்கு சீருடைப்படி ரூ.250/– லிருந்து ரூ.500/– ஆக உயர்த்தி தருமாறு பலநோக்கு சுகாதார பணியாளர் சங்கத்திலிருந்து கடிதம் பெறப்பட்டுள்ளது.

அரசு ஆணை எண்.468, சுகாதாரம் மற்ம் குடும்ப நலம் நாள்.10.07.95 மற்றும் சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மான எண்.1222/96, நாள்.11.04.96ன்படி சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் பணி செய்து வரும் பலநோக்கு சுகாதார பணியாளர்கள் / துணைச் செவிலியர்கள் / மகப்பேறு உதவியாளர்களுக்கு சீருடைப்படி ஆண்டு ஒன்றிற்கு ரூ.250/– வழங்கப்பட்டு வருகிறது. அரசாணை எண்.2151 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள் 04.11.88 ன்படி அரசுத் துறையில் பலநோக்கு சுகாதார பணியாளர்கள்/துணைச் செவிலியர்கள்/மகப்பேறு உதவியாளர்களுக்கு, கிராம சுகாதார செவிலியர்கள் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அரசாணை (டி) எண்.457, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல (என்2) துறை, நாள்.31.03.2001ன்படி மேற்படி பதவியில் உள்ளவர்களுக்கு சீருடைப்படி ரூ.250/–லிருந்து ரூ.500/– ஆக உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இவ்வரசாணை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மூலம் வழங்கப்பட்டு,

(அ) இயக்குநர், பொது சுகாதார மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை, சென்னை–6

(ஆ) இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை, சென்னை–6 ஆகிய துறைகளுக்கு மட்டும் விலாசமிடப்பட்டுள்ளது.

இவ்வரசாணை மாநராட்சி/நகராட்சிகளுக்கு விலாசமிடப்படாத காரணத்தால் இதனை சென்னை மாநகரட்சியில் செயல்படுத்த அரசின் ஆணை பெறப்பட வேண்டும். இதனை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தினால் ஆண்டு ஒன்றிற்கு சுமார் ரூ.1,77,500/– கூடுதல் செலவினம் ஏற்படும்.

எனவே, அரசு ஆணை (டி) எண்.457, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல (என்2) துறை, நாள்.31.03.2001ன்படி பலநோக்கு சுகாதார பணியாளர்கள் / துணைச் செவிலியர்கள் / மகப்பேறு உதவியாளர்களுக்கு சீருடைப்படி ஆண்டு ஒன்றிற்கு ரூ.250/–ஐ ரூ.500/– ஆக திருத்தி அமைத்து அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இவ்வரசாணையை அரசின் ஆணை பெற்று சென்னை மாநகராட்சியில் செயல்படுத்த நிலைக்குழு (சுகாதாரம்) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“05.05.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.29 /2008 நாள் 05.05.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந.(ம)மகு.ந.எண்.மே.த.ம.பி/1179/2008**
**ஆணையாளர் அவர்களின் 04–04–2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :258/2008 பொருள் எண்: 52

**சென்னை மாநகராட்சி – குடும்ப நலத்துறையில் இயங்கும் நலவாழ்வு நிலையங்களின் பணிநேரம் மாற்றியமைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டுவது.**

சென்னை நகரில் தற்போது 93 நகர நலவாழ்வு நிலையங்கள் சென்னை மாநகராட்சியின் மூலம் செயல்படுகின்றன. இதன் மூலம் சென்னை நகரில் வசிக்கும் மக்கள், குறிப்பாக குடிசைவாழ் பகுதி மக்கள், மற்றும் சமுதாயத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் பயனடைகின்றனர்.

இந்த நகர நலவாழ்வு நிலையங்கள், காலை 8.00 மணி முதல் 12.00 மணி வரையிலும், மாலை 3.00 மணி முதல் 5.00 மணி வரையிலும் இயங்கிவருகின்றன. இந்நிலையில் மேற்படி வேலை நேரத்தை கூர்ந்து நோக்குகையில், புள்ளி விவர அடிப்படையில் மாலை 3.00 மணிக்கு மேல் வரும் நோயாளிகளை விட காலை நேரத்தில் மிக அதிக எண்ணிக்கையில் நோயாளிகள் வருகை புரிகின்றனர். ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை அளிக்கப்படுவதோடு அரசு பொது விடுமுறை நாட்களில் காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை இந்த நல வாழ்வு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

மாமன்றத் தீர்மான எண்:460/2007, பொருள் எண்:73, நாள்: 31.08.2007 படி மாநகராட்சியில் உள்ள மருந்தகங்கள் பணி நேரம் காலை 8.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை ஒரே பகுதி நேரமாக செயல்படவும், மேலும் அரசு பொது விடுமுறை நாட்களில் (ஞாயிற்றுக்கிழமை தவிர) மருந்தகங்கள் தற்சமயம் நடைமுறையில் உள்ளது போல் காலை 8.00 மணி முதல் 12.00 மணி வரை இயங்குவதற்கும் மன்றம் அனுமதி அளித்துள்ளது.

எனவே,

1. நகர நலவாழ்வு நிலையங்களிலும் ஒரே பகுதி நேரமாக மருத்துவர்களை பணி செய்ய பணிக்கும் போது 'தீ' விபத்து, புயல், வெள்ளம் போன்ற இயற்கை சீற்றத்தின் போது 10 மண்டலங்களில் உள்ள மருத்துவர்களை அவசர தேவைக்கு அழைத்துக் கொள்ள ஏதுவாகவும்,
2. நகர நலவாழ்வு நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்கள் தங்கள் இல்லத்திற்கு அருகாமையில் உள்ள நகர நலவாழ்வு நிலையங்களுக்கு பணிமாற்றம் வேண்டி விண்ணப்பிப்பதை தவிர்க்கவும் முடியும்.

24 மணி நேர மகப்பேறு அவசர சிகிச்சை மருத்துவ மனைகள், குடும்ப நல அறுவை சிகிச்சை மருத்துவ மனைகள், மகப்பேறு மருத்துவ மனைகள் ஆகியவை வழக்கம் போல செயல்படும். அங்கு பணிபுரியும் பணியாளர்கள் ஷிப்ட் முறையில் பணிக்கு வருவதன் மூலம் 24 மணி நேரமும் மக்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க இயலும்.

எனவே, மேற்காணும் இனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நன்மைகளை கருதி, மாவட்ட குடும்ப நலத்துறையின் கட்டுபாட்டின் கீழ் இயங்கி வரும் நகர நலவாழ்வு நிலையங்களின் பணி நேரம் காலை 8.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை ஒரே பகுதி நேரமாக செயல்படுத்தவும், மேலும் அரசு பொது விடுமுறை நாட்களில் (ஞாயிற்றுக்கிழமை தவிர) நகர நலவாழ்வு நிலையங்கள் தற்சமயம் நடைமுறையில் உள்ளது போல் காலை 8.00 மணி முதல் 12.00 மணி வரை இயங்குவதற்கும், மாமன்றத்தின் அனுமதி வேண்டி, நிலைக்குழு–(பொது சுகாதாரம்) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"05.05.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.28 /2008 நாள் 05.05.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம் ) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண்.சி2/001914/2008**
**ஆணையாளர் அவர்களின் 12.05.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :259/2008 பொருள் எண். 53

**பணியமைப்பு – ஒரு வழி பணியிட மாறுதல்**

திரு.பா.மாரிராஜ், சுகாதார ஆய்வாளர், மண்டலம்–4 பணிபுரியுமிடம் மண்டலம்–5, என்பவர் 02.04.2008 நாளிட்ட தனது கடிதத்தில் தனது குடும்பம் திருநெல்வேலியில் வசித்து வருவதாகவும், தனது தகப்பனார் 31.01.2008ல் காலமானதால் குடும்பத் தலைவரின்றி மிகவும் கஷ்டப்படுவதால் சென்னை மாநகராட்சியிலிருந்து திருநெல்வேலி மாநகராட்சிக்கு ஒருவழி பணியிடமாற்றம் வேண்டி விண்ணப்பித்துள்ளார்.

இது சம்பந்தமாக தெரிவிப்பது யாதெனில், மேற்கண்ட தனியர் சென்னை மாநகராட்சியில் பிறப்பு மற்றும் இறப்பு எழுத்தராக ஆணையர் அவர்கள் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/8364/99 நாள்.19.12.2000ன்படி பணிநியமனம் செய்யப்பட்டு தனியர் 04.01.2001ல் பணியில் சேர்ந்துள்ளார். நிலுவையிலுள்ள நீதி பேராணை மனு எண்.1534/2001க்கு குந்தகமின்றி இவரது பணிகள் இப்பதவியில் 04.01.2001 முதல் வரன்முறைப்படுத்தப்பட்டு 04.01.2003 முதல் தகுதிகாண் பருவம் வழங்கப்பட்டு உள்ளது. பின்னர் இவர் 29.09.2007 முதல் சுகாதார ஆய்வாளராக, பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வருகிறார்.

இவர் மீது துறை சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளோ விழிப்பு பணி அலுவலக நடவடிக்கைகளோ ஏதும் நிலுவையில் இல்லை. ந.நி.ம.கு.வ.துறையின் கடிதம் எண்.27274/மா.ந.5/96–1 நாள்.08.07.1996ல் ஒரு மாநகராட்சியிலிருந்து மற்றொரு மாநகராட்சிக்கு மாற விரும்பினால் இரண்டு மாநகராட்சிகளும் தீர்மானம் நிறைவேற்றி பின்னர் எடுத்துக் கொள்ளும் மாநகராட்சி இதற்கான செயற்குறிப்புடன் அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என தெரிவித்துள்ளது.

எனவே, திரு.பா.மாரிராஜ், சுகாதார ஆய்வாளர், சென்னை மாநகராட்சியிலிருந்து திருநெல்வேலி மாநகராட்சிக்கு ஒருவழி மாறுதலில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

திக.மே.து.ந.க.எண்.எ7/1328/2008
ஆணையாளர் அவர்களின் 08.04.2008 நாளிட்ட குறிப்பு

19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின்
நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :260/2008 பொருள் எண்.54

பணியமைப்பு

2008–2009ம் ஆண்டு சென்னை மாநகராட்சி நிதிநிலை திடக்கழிவு மேலாண்மைத் துறைக்கு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் ஒன்றான " **துப்புரவு பணியாளர்** " என்ற பதவி பெயரை " **தூய்மை பணியாளர்** " என மாற்றம் செய்தல் குறித்து கீழ்கண்டவாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய பெயர் " தூய்மை பணியாளர்"

சிங்காரச் சென்னையை உருவாக்கும் பணியில் தூணாக இருப்பது துப்புரவு பணியாளர்களின் தூய்மைப் பணியேயாகும் என்றால் அது மிகையாகாது. அத்தகைய அதி உன்னத அழகூட்டும் அரிய செயல்புரியும் அவர்களை " **தூய்மை பணியாளர்** " என அழகிய செம்மொழியால் அழைக்கப்படுவர். அதனால் உள்ளம் குளிர்ந்து அர்ப்பணிப்பு உணர்வோடும், எண்ண எழுச்சியோடும் மாநகரை சிங்காரிப்பதற்கு சிரமேற்கொண்டு பணியாற்றுவர் என்கிற நம்பிக்கையில், இந்த நிதியாண்டு முதல் இப்புதிய பெயரிடல் முறை அமல்படுத்தப்படுகிறது.

இச்சீரிய பணியாளர்கள், வீதி கூட்டுபவர்கள், தெருக்குப்பைகளை எடுப்பவர்கள் தானே என்கின்ற இழிநிலை பேச்சின் அவலம் மாறி தான் ஒரு " **தூய்மை பணியாளர்** " என்கின்ற அருமையை உணர்ந்து பெருமிதத்துடன், புதுப்பொலிவுடனும் பணியாற்றுவர் என்பதில் சென்னை மாநகராட்சிக்கு ஐயமில்லை.

இதுசம்பந்தமாக தெரிவிப்பது என்னவென்றால் மக்கள் தொகையும், குப்பையும் நாளுக்கு நாள் பெருகி வருகின்ற நிலையில் துப்புரவு பணியாளர்களின் பணி மிகவும் இன்றியமையாததாகும். **சுத்தம் சோறு போடும்** என்ற பழமொழிக்கேற்ப நகரை தூய்மையாக பாதுகாக்க துப்புரவு பணியாளர்களின் பணி மிகவும் அவசியமான, உன்னதமான பணிகளுள் ஒன்றாகும். எந்த பணி ஒன்று முடங்கினாலும் துப்புரவு பணியானது தினமும் கழிவுகளைஅகற்ற வேண்டிய கட்டாயமான பணிகளில் ஒன்றாகும். தூய்மை பணி செம்மையாக செய்யத் தவறினால் மற்ற எந்த பணியை சிறப்பாக செய்தாலும் சென்னை நகரை சிங்கார சென்னையாக கூற முடியாது. எனவே சென்னையை எழில் மிகு சிங்காரச் சென்னையாக மாற்றம் செய்ய தூணாக இருக்கும் பணி துப்புரவு பணியாகும். மேலும் பொதுமக்கள் பல தொற்று நோய் பரவுவதிலிருந்தும் காக்கப்படுவர்.

எனவே, இத்தகைய சிறப்பான பணியினை செய்யும் துப்புரவு பணியாளர்களை வீதி கூட்டுபவர்கள், தெருக்குப்பைகளை எடுப்பவர்கள் என்ற இழிநிலை பேச்சின் அவலம் மாற " **துப்புரவு பணியாளர்** " என்ற பதவி பெயரை " **தூய்மை பணியாளர்** " என மாற்றம் செய்வதால் துப்புரவு பணியாளர் ஒவ்வொருவரும் மிகுந்த அர்ப்பணிப்பு உணர்வோடும், எண்ண எழுச்சியோடும் மாநகரை சிங்காரிப்பதற்கு பெருமிதத்துடனும், புது பொலிவுடனும் தங்கள் பணியினை செய்வதற்கு வழிவகை செய்ய உதவியாக இருக்கும்.

எனவே, சென்னை மாநகராட்சியில் பணிபுரிகின்ற " **துப்புரவு பணியாளர்** " என்ற பதவி பெயரை " **தூய்மை பணியாளர்** " என மாற்றம் செய்ய அரசாணை பெற நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பே.சா.து.ந.க.எண்.பி5/3760/07**
**ஆணையாளர் அவர்களின் 21.04.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :261/2008 பொருள் எண்.55

**வெளிநாடு செல்ல கடவுச்சீட்டு பெற தடையின்மை சான்று**

சென்னை மாநகராட்சி, பேருந்து சாலைகள் துறை, செயற்பொறியாளர், திரு.எஸ்.என்.சங்கர், அவர்கள் 26.12.2007 நாளிட்ட கடிதத்தில் தனது மகள் திருமதி.நந்தினி மற்றும் மருமகன் திரு.பி.பிரவின் குமார் அவர்கள் பிரிட்டனில் (United Kingdom) வேலை செய்து கொண்டிருப்பதால் தனது மகள் மற்றும் மருமகனை பார்க்க பிரிட்டன் சென்று வர கடவு சீட்டு (Passport) பெறுவதற்கு தடையில்லா சான்றிதழ் வழங்கும்படி கோரியுள்ளார்.

இது சம்பந்தமாக சமர்ப்பித்துக் கொள்வது யாதெனில், திரு.எஸ்.என்.சங்கர், அவர்கள் சென்னை மாநகராட்சியில் உதவி பொறியாளராக 07.05.1979 முதல் பணியில் சேர்ந்தார். பிறகு 06.6.1991 முதல் உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்றார். மேலும், 07.7.2000 முதல் செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று, இந்நாள் வரை தொடர்ந்து பணியாற்றி வருகிறார். இவர் இதுவரை 28 வருடங்களுக்கு மேல் பணியாற்றியுள்ளார். இவர் 31.5.2011 அன்று பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார். இவரது பணி உதவி பொறியாளர் பதவியில் 07.05.79 முதல் வரன்முறை செய்யப்பட்டு, 07.05.81 முற்பகல் முதல் தகுதி காண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகையால், தனியருக்கு கடவுசீட்டு பெறுவதற்கு தடையில்லா சான்றிகழ் வழங்குவதற்காக இவர் மீது ஏதேனும் குற்றச்சாட்டுகள் மற்றும் விசாரணைகள் ஏதேனும் நிலுவையில் உள்ளதா ? என சென்னை மாநகராட்சி, விழிப்பு அலுவலரிடம் கோரப்பட்டது. சென்னை மாநகராட்சி, விழிப்பு அலுவலர் அவர்களின் 13.02.2008 நாளிட்ட குறிப்பில் திரு.எஸ்.என்.சங்கர், செயற்பொறியாளர், பேருந்து சாலைகள் துறை அவர்கள் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்புக் குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், தனியர் மீது குற்றச்சாட்டுகள் மற்றும் விசாரணைகள் ஏதேனும் நிலுவையில் உள்ளதா என விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை இயக்குனரிடம் கருத்துரை கோரப்பட்டது. விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு இயக்குநர் அவர்களின் 01.02.2008 நாளிட்ட கடிதத்தில் தனியர் மீது விசாரணையோ அல்லது புலன் விசாரணையோ நிலுவையில் இல்லை என தெரிவித்துள்ளார்.

மேலும், தனியர் மீது குற்றச்சாட்டுகள், வழக்குகள் மற்றும் விசாரணைகள் ஏதேனும் நிலுவையில் உள்ளதா என காவல்துறை கண்காணிப்பாளர், சி.ஐ.டி. பாதுகாப்பு பிரிவு அவர்களிடம் கருத்துரை கோரப்பட்டது. சி.ஐ.டி. பாதுகாப்பு பிரிவு காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களின் 19.02.2008 நாளிட்ட கடிதத்தில் தங்கள் அலுவலக ஏடுகளில் திரு.எஸ்.என்.சங்கர், செயற்பொறியாளர், பேருந்து சாலைகள் துறை, சென்னை மாநகராட்சி அவர்கள் மீது எந்தவிதமான எதிரிடை குறிப்புகள் (Nothing adverse) இல்லை என்றும் தனியருக்கு வெளிநாடு சென்றுவர தடையில்லா சான்றிதழ் வழங்க பாதுகாப்பு குறிப்பீடு சம்பந்தமாக ஏதும் தடையில்லை என தெரிவித்துள்ளார்.

மேலும், சென்னை மாநகராட்சி, பேருந்து சாலைகள் துறையில் திரு.எஸ்.என்.சங்கர், செயற்பொறியாளர், அவர்கள் மீது இந்நாள் வரையில் எந்தவிதமான குற்றச்சாட்டுகளும் மற்றும் விசாரணைகளும் நிலுவையில் இல்லை.

ஆகையால், சென்னை மாநகராட்சி, பேருந்து சாலைகள் துறை, செயற்பொறியாளர் திரு.எஸ்.என்.சங்கர், அவர்கள் தனது மகள் திருமதி.நந்தினி மற்றும் மருமகன் திரு.பி.பிரவின் குமார் அவர்களை பார்க்க பிரிட்டன் சென்று வர கடவுசீட்டு பெற கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தடையில்லா சான்று வழங்குவதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(1) ஆணையரின் முன் அனுமதி இன்றி தனியர் வெளிநாட்டில் தங்கியிருக்கும்போது அந்நாட்டில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தி கொள்வதோ, பயிற்சியில் கலந்து கொள்வதோ மற்றும் மேற்படிப்பு மேற்கொள்ளவோ கூடாது.

**பே.சா.து.ந.க.எண்.பி5/3760/07**

(2) வெளிநாட்டில் தங்கியிருக்கும் காலத்தில் வியாபார சம்பந்தமாக ஆதரவு திரட்டுவதோ மற்றும் அது சம்பந்தமாக பணிபுரிவதோ கூடாது.

(3) தனியர் வெளிநாடு சென்று வருவதற்கான செலவினங்களை சென்னை மாநகராட்சி ஏற்காது.

(4) வெளிநாடு புறப்படுவதற்கு முன் உரிய முறையில் விண்ணப்பம் அளித்து தகுதிவாய்ந்த விடுப்புக்கான அனுமதி பெற வேண்டும் என்றும்; அவ்வாறு பெறும் விடுப்பு 6 மாதங்களுக்கு மிகையாகக் கூடாது.

(5) வெளிநாட்டில் தங்கியிருக்கும்போது தனியர் தான் சென்னை மாநகராட்சியில் வகித்துவரும் பதவியிலிருந்து விலகல் கடிதம் (Resignation letter) அளிக்கும் பட்சத்தில் அதனை ஏற்க இயலாது.

(6) தனியருக்கு இப்பயணத்திற்காக வழங்கிய தடையில்லா சான்றிதழின் பேரில் பெறப்பட்ட கடவுச் சீட்டினை அடுத்தடுத்த வெளிநாடு பயணங்களுக்கு ஆணையரின் முன்அனுமதி இன்றி பயன்படுத்தக்கூடாது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பே.சா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :262/2008 பொருள் எண். 56

**ஹஜ் பயணத்திற்கு அனுமதிக்கப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறை, புளியந்தோப்பு, மண்டலத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர்.திருமதி. எம்.ஏ.வகிதாபானு அவர்கள் ஏப்ரல் மாதம் 2008ல் ஹஜ் புனிதயாத்திரை பயணம் மேற்கொள்வதற்கும் அத்துடன் கடவுசீட்டு புதுப்பிப்பதற்கும் அனுமதி வேண்டி கடிதம் சமர்ப்பித்துள்ளார்கள்.

தனியர் சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்துறையில் 15.11.1989 முதல் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறார். தனியர் மருத்துவ அலுவலராக பணியமர்த்தப்பட்டதற்கு பணிவரன்முறை படுத்தி தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்துறையில் தனியர் மீது எந்த வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலகத்திலிருந்தும் இது போன்று அறிக்கை பெறப்பட்டுள்ளது. மேலும், காவல்துறை கண்காணிப்பாளர் பாதுகாப்பு பிரிவு குற்றபுலானாய்வு மற்றும் மாநில ஊழல் தடுப்பு இயக்குநரகத்தில் இருந்தும் விசாரணை ஏதுமில்லை என்று அறிக்கை பெறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் மருத்துவ அலுவலர் பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் தனியர் கடவுச்சீட்டு புதுப்பிப்பதற்கும், வெளிநாடு செல்வதற்கும் மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். தனியர் அவர்கள் ஏப்ரல் 2008ல் பயணம் மேற்கொண்டு உள்ளதால் கால தாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் பின்னேற்புகுட்பட்டு கடவுச்சீட்டு புதுப்பிப்பதற்கும், ஹஜ் புனித யாத்திரை செல்வதற்கும் 31.03.2008 தேதியிட்டு ஆணையர் அனுமதி வழங்கியதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ3/3389/07**

**ஆணையாளர் அவர்களின் 20.11.2007 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :263/2008 பொருள் எண்.57

**பணியமைப்பு**

திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., இணை ஆணையர் (கல்வி) அவர்களின் பதவியினை கூடுதல் ஆணையர் (கல்வி) என பதவி உயர்வு செய்யப்பட்டு, அரசாணை (நிலை) எண்.1698, பொது (சிறப்பு–அ) துறை நாள்.24.10.2007 அரசு ஆணை வெளியிட்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்காக நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின் பதிவிற்கும், தகவலுக்கும், சமர்ப்பிக்கின்றது "

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ3/3439/07**
**ஆணையாளர் அவர்களின் 31.03.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :264/2008 பொருள் எண்.58

**பணியமைப்பு**

திரு.ஆஷிஷ் சாட்டர்ஜி, இ.ஆ.ப., துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் பதவியினை இணை ஆணையர் (பணிகள்) என பதவி உயர்வு செய்யப்பட்டு, அரசாணை (நிலை) எண்.273, பொது (சிறப்பு–அ) துறை நாள்.03.03.2008 அரசு ஆணை வெளியிட்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்காகவும், மற்றும் பதிவுக்காகவும் நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
பதிவிற்கும், தகவலுக்கும், சமர்ப்பிக்கின்றது "

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பே.சா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்